சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

இலக்கிய மாத இதழ். 2 அ

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2 இதழ் 2 | பிப்ரவரி 1956 | மன்மத தை

ராஜ்ய புனரமைப்பு

ராஜ்ய புனரமைப்புக் கமிஷனின் சிபார்சுகளின் பேரில் இந்திய அரசாங்கம் தனது முடிவைத் தெரிவித்திருக்கிறது.

கமிஷனின் சிபார்சுகளில் பல குறைகள் இருந்தன. இவைகளை அரசாங்கம் நீக்கவில்லை; மாறாகப் பெரிதாக்கி யிருக்கிறது.

தேவிகுளம், பீர்மேடு தாலூகாக்கள் நியாயமாகத் தமிழர்களுக்குச் சேரவேண்டியவை. இவற்றைக் கேரளத்துடன் சேர்த்தது கமிஷன். சில நொண்டிக் காரணங்களைக் காட்டி தங்கள் செய்கைக்கு நியாயம் கற்பித்தது கமிஷன். அரசாங்கமோ காரணம் எதையும் காட்டாமலேயே, இத் தாலூக்காக்களை கேரளத்துடன் சேர்த்திருக்கிறது. அத்துடன் நிற்கவில்லை. செங்கோட்டைத் தாலூகாவின் மேற்குப் பகுதியையும் கேரளத்துக்குத் தானம் வழங்கி யிருக்கிறது. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதான்!

அரசாங்கத்தின் இந்த முடிவு சகோதரச் சண்டையை வளர்க்கவே உதவும். பிரதமர் நேரு எதிர்பார்ப்பதைப் போல ஒற்றுமையை வளர்க்காது; சிதைக்கவே செய்யும்.

சுதந்திரத்தைப் பாதுகாக்க, நமது நாட்டை வளமாக்க ஒற்றுமை மிகமிகத் தேவை. ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற மக்களின் ஒத்துழைப்புத் தேவை. மக்கள் தங்கள் கடமையைச் செய்ய முன்வரவேண்டும் என்று பிரதமர் நேரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

உரிமையை மறுத்து கடமையை மட்டும் கோரமுடியாது. இதை அரசாங்கம் உணரவேண்டும். உணர மறுப்பதின் பலன்தான் நாட்டில் இன்றுள்ள கொந்தளிப்பு. பலாத்காரத்தின்மூலம் இதை அடக்கிவிட முடியாது.

ஆகவே அரசாங்கம் தங்கள் முடிவை மாற்றவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம். மறுத்தால் மக்களின் ஒன்றுபட்ட சக்தி நிச்சயம் மாற்றியே விடும்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள கயானு தீவின் மக்கள் நடத்தி வரும் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி நாம் அறிவோம். கயானு தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் ஜகன் நமது நாட்டுக்கு விஜயம் செய்து சொற்பெருக்காற்றியதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

கயானு நாட்டின் தேசியக் கவி, மார்ட்டின் கார்ட்டர் தேசிய இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார். கயானுவின் பாடுபட்டுழைக்கும் அடிமைகளின் நிலைமையைச் சித்திரிக்கும் அவரது கவிதையின் தமிழாக்கத்தைக் கீழே தருகிறோம். திரு. "மதுரைப் பாண்டியன்" அவர்கள் கவிதையைத் தமிழாக்கித் தருகிறார்.

ஒரு அடிமையின் சாவு

(சிந்து)

'மதுரைப்பாண்டியன்'

1. பச்சை நாணல் தட்டைகளின் - மேலே
பரந்த நீல வானகமே ;
பச்சைப் பசும்புல் புதருக்குக் - கீழே
பழுப்பு நிறத்து வையகமே ;

2. வடிந்து சுழலும் ஆற்றிடையே - வயல்
மருங்கில் பெரிய காட்டகத்தில்
அடிமைத் தனமெனும் போர்வைதான் - அடா !
அஞ்ச வருமிருள் போன்றிருக்கும்.

3. தோலின் நிறந்தான் கருமையடா - உணர்வு
தோன்றும் இதயம் சிவப்படா !
ஞாலம் எங்கணும் காட்டகத்தும் - இள
ஞாயிறு வருமிடம் எங்கணுமே !

4. அஞ்ச வருமிருள் வையகத்தில் - உணர்ச்சி
அன்பு வற்றிய வையகத்தில்
கொஞ்சங் கொஞ்சமாய்க் கோபமெனும் - விதை
கொண்டுவந்து காலம் விதைப்பதுகாண் !

5. ஈங்கு மற்றொரு வையகமே - ஆனால்
இதற்கு மேலந்த நீலவானம் !
காங்கைக் கதிரும் மேலிருக்கும் - கீழே
கருகி வருந்தும் கவலைமனம் !

6. நாணல் தட்டைகள் தம்வாழ்வைத் - தமக்குள்
நாடிக் காட்டிலே வாழ்ந்திருக்கும் ;
காணும் இதயம் சிவந்திருக்க - அடிமை
கனன்று தவித்து வாழுகின்றான் !

7. ஏழை அடிமையின் முதுகிலே - அடா !
ஏழை கழுத்திலே சுட்டெரித்து
வீழும் சாட்டை அடியைப்போல் - ஒவ்வொரு
விந்தை நாளும் வந்திடுமே !

8. ஆற்றின் அக்கரைக்கு அப்பாலே - கிழம்போல்
அந்திச் சூரியன் விழ்வதுகாண் !
காற்றில் வெண்ணிறப் பறவையெலாம் - சொப்பனக்
காட்சிபோல் பறந்து கீழிறங்கும் !

9. வெள்ளம் புரளும் ஆற்றினின்று - இரவு
மெல்லத் திருடன்போல் வந்திடுமே !
தள்ளும் அமைதிப் படகினிலே - காட்டைத்
தாண்டி வருவது நள்ளிரவே !

10. அஞ்ச வருமிருட் போர்வையினை - அடா !
அந்தநள் ளிரவு போர்த்திருக்கும் !
கொஞ்சங் கொஞ்மாய்க் காட்டகத்தை - வெள்ளக்
குமிழி ஆற்றினை மூடிவிடும் !

11. ஏழை அடிமை தள்ளாடித் - தரையில்
இன்முகம் புதைத்து வீழுகின்றான் !
கீழே விழுந்து சத்தமின்றி - அங்குக்
கீறி உடையுது பறையடா !

12. நள்ளிராப் போதின் அமைதிபோல - அந்த
நல்ல பறையும் ஆச்சுதடா !
தள்ளும் படகு உடைந்ததுபோல் - துயரந்
தாக்கும் அலைகளில் மோதுமடா !

13. அஞ்ச வருமிருள் வையகத்தில் - உணர்ச்சி
அன்பு வற்றிய வையகத்தில்
கொஞ்சங் கொஞ்சமாய்க் கோபமெனும் - விதை
கொண்டுவந்து காலம் விதைப்பதுகாண் !



குட்டிக்கதைகள்

எப்படி முடியும்?

ஒரு தோட்டத்தில் குழந்தை ஒன்று விளையாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது அந்தக் குழந்தை தவறிப்போய் ஒரு பாம்பை மிதித்துவிட்டது. பாம்புக்குக் கோபம் வந்தது. குழந்தையைக் கடித்தது. குழந்தை செத்துப் போயிற்று, பாம்பு குழந்தையைக் கடித்தது என்பதைத் தகப்பன் அறிந்தான். உடனே கம்பை எடுத்துக் கொண்டு பாம்பை அடிக்க ஓடினான். பாம்பு ஓடியது, கையிலிருந்த கம்பை பாம்பின்மேல் வீசினான். பாம்பின் மேல் கம்பு விழுந்தது. பாம்பின் வால் துண்டாகி விட்டது. வாலை இழந்த பாம்பு வேகமாய் ஓடியது. புற்றுக்குள் மறைந்து விட்டது. மறுநாள் எப்படியாவது பாம்பைப் பிடித்துக் கொன்று போடவேண்டும் என்று தீர்மானித்தான். கொஞ்சம் பாலையும் தேனையும் கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு போனான். புற்று வாசலில் வைத்தான். ரொம்பப் பிரியமாக பாம்பைப் பால் குடிக்க வரும்படி அழைத்தான். வந்த பிறகு அதை அடித்துக் கொல்லுவது தகப்பனின் திட்டம். பாம்புக்கு அது தெரிந்துவிட்டது. அழைத்த தகப்பனிடம், "ரொம்பப்பிரியமாக அழைக்கிறாயே அப்பா! உன்னை எப்படி நம்புவது? உனக்கு மகன் போய் விட்டான்; எனக்கு வால் போயிற்று. இந்த இரண்டும் மீண்டும் கிடைத்தால் ஒழிய நமக்குள் எப்படியப்பா சமாதானம் ஏற்பட முடியும்?" என்று பாம்பு கேட்டது.

★

சூழ்நிலை தெரியா விட்டால்?

இரண்டு காளைகள் சண்டை போட்டுக் கொண்டிருப்பதை ஒரு தவளை பார்த்தது "ஐயோ, இனி நாம் என்ன செய்யப் போகிறோம்" என்று வருந்தியது. அதைக் கேட்ட மற்றொரு தவளை "அவைகள் சண்டை போட்டால் நமக்கென்ன? தங்களுக்குள் யார் பலவான் என்று தெரிந்து கொள்வதற்காக சண்டை போடுகின்றன" என்று சொல்லிற்று.

இதைக் கேட்ட முதல் தவளை "நீ சொல்லியது உண்மைதான். ஆனால் எந்தக் காளை தோற்கிறதோ அது நாம் இருக்கிற இடத்துக்குத் தனியாக விரட்டப் பட்டுவிடும். அப்புறம் நாம் இங்கே எப்படி வாழ்

ஈசாப்

வது? 'நம்மையெல்லாம் நசுக்கி விடும்!" என்று நடுங்கிக் கொண்டே கூறியது.

அப்படியே நடந்தது. காளை கள் சண்டை போட்டால் தங் களுக்கென்ன என்று நினைத்த தவளை நசுங்கிச் செத்தது.

★

வீண் பெருமை

வெயில் கொடூரமாக அடித் தது. ஒரு காளைக்கு அது தாங்க முடியவில்லை. ஓடையில் இறங்கி தண்ணீரின் குளிர்ச் சியை அனுபவித்துக் கொண்டி ருந்தது. அந்தச் சமயம் ஒரு ஈ பறந்து வந்தது. காளையின் கொம்பில் உட்கார்ந்தது. வரும் போதே 'ஙொய்' என்று ரீங்கா ரம் இட்டுக் கொண்டு வந்தது.

காளையைப் பார்த்து, "காளை யாரே, காளையாரே! நான் உன் கொம்பில் உட்கார்ந்திருப்பதற் காக மன்னித்துக் கொள். நான் இருப்பது உனக்குத் தாங்க முடியவில்லையானால் அதைச் சொல்லிவிடு. பக்கத்தில் உள்ள மரத்தில் போய் உட்கார்ந்து விடுகிறேன்" என்று ஈ சொன் னது.

இதைக் கேட்டு காளை சிரித்தது. "அட, ஈயே! நீ என் கொம்பில் இருந்தா லும் போனாலும் ஒன்று தான். நீ மட்டும் ரீங்காரம் செய்யவில்லையானால் நீ இருப் பதே எனக்குத் தெரியப்போவ தில்லை. எதற்காக அநாவசிய மாக உன்னைப்பற்றிப் பிரமாத மாக நினைத்துக் கொண்டிருக் கிறாய்" என்றது காளை.

★

முன் யோசனை

காட்டுப்பன்றி ஒன்று மரத் தில் 'தனது கொம்புகளைத் தீட் டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த நரி, "எதிரி யாரையும் காணோம்; எதற்காகக் கொம்பு களைத் தீட்டுகிறாய்?" என்று காட்டுப் பன்றியிடம் கேட்டது.

இதைக் கேட்ட காட்டுப்பன்றி சிரித்தது. "எதிரி முன்னால் வந்து விட்டால் அப்பொழுது எப்படியப்பா கொம்பைத் தீட்ட முடியும்? சும்மா இருக்கிற நேரத் தில் தான் அதைச் செய்ய வேண்டும். அப்பொழுது தானே எதிரி வரும்போது தயா ராக இருக்க முடியும்" என்று நரிக்குப் பதில் கொடுத்தது.

புதுமைப்பித்தன்

(3)

ஆர். கே. கண்ணன்

மனிதவர்க்கத்தைக் கூர்ந்து கவனித்த கலைஞர் புதுமைப் பித்தன். இயற்கையின்பால் ஒரு பக்தனைப்போல் அன்பு செலுத்தியவர் புதுமைப்பித்தன். ரக ரகமான மனிதர்கள், விதவித மான மனப்போக்குகள், வகை வகையான மனித அனுபவக் கூறுகள், புதிய புதிய, முற்றி லும் எதிர்பாராத விதமான, திருஷ்டி கோணங்கள், எண்ணக் கோணல்கள், உணர்ச்சி கோளங்கள்-இவற்றின் ரசக்கல வைதான் புதுமைப்பித்தனின் இலக்கியம்.மனிதர்களே-ஆண்க ளும், பெண்களும் – கதாபாத் திரங்கள். சில கதைகளில்— "கயிற்றரவு", "சாமியாரும் குழந்தையும் சீடையும்" முதலி யன—வெறுங் கருத்துக்களே பிரதான கதைப்பாத்திரங்கள்.

இவை ஒவ்வொன்றுக்கும் அழுத்தமும் அர்த்தமும் தரும் வகையில் பொருத்தமான பகைப் புலம் அமைப்பதில் சமர்த்தர் புதுமைப்பித்தன். சூழ்நிலையும், மனோநிலையும் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் அமைந்து ஒன்றி விடுகின்றன. ஒவ்வொரு கதைக் குழுள்ள நாடகபாவக் கட்டும் முறுக்கும் இளகாமல், தளராமல், நிலைநிறுத்துவதற்கு நிகழ்ச்சிக ளுடன் உள்ளத்து நெகிழ்ச்சிக ளுடன் சமபலத்துடன் போட்டி போட்டுக்கொண்டு பகைப்புலம் வேலை செய்கிறது.

"கயிற்றரவு" பரமசிவம் பிள்ளையின் ஆத்மவிசாரத்துக்கு, –எது நித்தியம், எது உண்மை, எது சரி என்கிற அர்ச்சுன சந் தேகத்துக்கு — புதுமைப்பித்தன் அமைக்கும் பகைப்புலத்தைப் பாருங்கள். ஏகாந்தமான கட் டாந்தரை, நல்ல வெய்யில், விடலைப்பனையின நிழல் நீள் கிறது, நகர்கிறது. பிள்ளை தள்ளித்தள்ளி உட்காருகிறார். சூரிய வெப்பம் மூளையை உருக்கி விடும்போலிருக்கிறது. மலத்தில் மாண்ட குடல் புழுவைக் காண் கிறார். மலப்பிறவி......பல ஜன் மம் பல மரணம், சீச்சீ......

"சாமியாரும், குழந்தையும்' சீடையும்" என்ற கதையின் பகைப்புலமும் இரசித்து அனுப விக்கத்தக்கது. "காளி கோவில்" "கபாட புரம்", "சிற்பியின் நரகம்"—அத்தனை கதைகளையும் இந்த ஒரு கலையம்சத்தை அனுப விப்பதற்கென்றே ஒரு தடவைக் குப் பல தடவை வாசிக்கலாம்.

சாதாரணமான பொருட்கள்— நமது கண்ணில் பட்டு கருத்தில் படாது போகும் — நுண்ணிய வாழ்க்கைச் சலனங்கள், புதுமைப்பித்தனின் கலைக் கண்ணுக்கு தப்புவதில்லை. அவற்றைக்கொண்டு அவர் பல உலகங்களையே படைத்துவிடுகிறார். குழந்தை மீனுவின் பட்டுச் சட்டை ("பாட்டியின் தீபாவளி"), ஒரு கழுத்துச் சரடு ("நினைவுப்பாதை"), ஒரு ஒட்டுப் பொறுக்கி ("கரியுக குசேலர்"), ஒரு பூ ("சார், நிச்சயமா, நாளைக்கு") ஒரு தெருவிளக்கு ("தெருவிளக்கு") ஒரு கொடுக்காப்புளி பழம் ("கொடுக்காப்புளி மரம்") ஒரு கரண்டி நெய் ("சணப்பன் கோழி")—இதில் ஏதாவது ஒன்று போதும், உங்கள் உள்ளத்தை அறுத்து உயிரை மாய்க்க!

மனிதனைப்பற்றி ஆத்மவிசாரம் செய்துகொண்டிருக்கும் சாமியாருக்குப் பக்கத்தில், ஒரு குழந்தையின் கால்காப்புக்கள் சூரியனுடன் கண்ணுமூச்சி விளையாட்டு விளையாடி அலைக்கழிக்கிறது. அழகு என்ற அந்தப் பந்தம் சாமியார் மனத்தில் படவில்லை, புதுமைப்பித்தன் கண்ணில் பட்டுவிடுகிறது! ஏகாந்தத்தில் மனக்குகைக்குள் தத்துவ விசாரம் செய்யும் சாமியாரின் மோன சிந்தனை ஒரு பக்கம் நடக்க, சூழ்ந்துள்ள இயற்கையன்னையும், தாமிரவருணியாறும் அவரது மோனத்தில் லயித்து நிற்க, பக்கத்தில் குழந்தை சீடையைக் கடித்து 'கடுக்' என்று ஒலி கிளம்புகிறது. இந்தச் சின்னஞ்சிறு ஒலி யதார்த்த உலகிற்கு இறங்கி வரும்படி சாமியாரைத் தூண்டுவதுபோலிருக்கிறது. "என்ன வறட்டு விசாரம் வேண்டியிருக்கிறது, நான் இருக்கிறேன் என்பதை மறக்காதே" என்று வாழ்வு கண்டனக்குரல் எழுப்புவதுபோல அச்சிறு ஒலி கர்ஜிக்கிறது. அந்த ஒலி சாமியார் காதில் விழவில்லை. அதைக் கேட்க அங்கு யாருமில்லை. ஆனால், புதுமைப்பித்தன் காதில் அந்த ஒலி புகுந்து சிந்தனையைக் கலக்கிவிட, அவர் அதைப் பேனா வழியே உலகெங்கும் கேட்கும்படி அஞ்சல் செய்கிறார். அக்கதையைப் படித்துப்பாருங்கள். புதுமைப்பித்தனின் மந்திர சக்தியைப் புரிந்துகொள்ள அது ஒன்றே போதும். அவர் ஒரு கவிஞர் என்பதை நிரூபிக்கும்.

கதையின் உள்ளடக்கத்துக்கேற்ற உருவம், வேகத்துக்கேற்ற நடை, அனுபவத்தின் படபடப்புக்கேற்ற சொல்லமைப்பு, கதை விஸ்தரிப்பில் அமைதி—இவையெல்லாம் கூடி அவர் ஒரு அசாதாரணமான சக்தி படைத்த எழுத்தாளர் என்பதை நிலைநாட்டிவிடுகின்றன. முதல்தரமான இலக்கியகர்த்தா ஆவதற்கு வேண்டிய எல்லா சக்தியும் அமைந்திருந்தது.

கதைகளில் பலவீனம் இருந்தால், அவரது இலக்கியத்தில் பலவீனம் இருந்தால்,

அதற்குக் காரணம் புதுமைப் பித்தனின் திறமைக் குறைவு தானு என்று கேள்விபோட்டுக் கொள்ளவேண்டாம். அது வீண் முயற்சி. அந்தப் பலவீனங்களை புரிந்துகொள்ள கலை இலக்கியத் துக் கெல்லாம் அடிப்படையா யுள்ள வெளியுலகத்தையும், வாழ்வையும் நாடவேண்டும். அந்த யதார்த்த வாழ்வு என்கிற உலகை அளக்கும் அவரின் தத்துவ திருஷ்டியை நாட வேண்டும். அந்தத் திருஷ்டியை உருவாக்குவதற்கு ஒரு காரண மாயிருந்த அவருடைய சொந்த வாழ்க்கை அனுபவத்தையும் நாடவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் (எனவே, ஒவ் வொரு எழுத்தாளனுக்கும்) ஒரு தனி அனுபவம் உண்டு; அதே பொழுதில் அது சமுதாய அனு பவத்தின் ஒரு பகுதியாகவே இயங்கி வருகிறது, வெளியிடப் படுகிறது. தனது சூழ்நிலையை விட்டு எந்த எழுத்தாள னும் பறந்து சென்றுவிட முடி யாதல்லவா? ஆகவே, அந்த எழுத்தாளனின் தனி அனு பவத்தில் பிரதிபலிக்கும் சமுதாய அம்சத்தைப் பரிசீலிக்க வேண்டும். அந்த எழுத்தாளனின் தனி அனுபவத்திற்குள் பொதிந் துள்ள சமுதாய ரீதியான போக்கை ஆராய வேண்டும். அதற்குப் பிறகு, அந்த எழுத்தாளன் தனது சொந்த அனுபவத்தை சமுதாய அனுபவத்துடன் இணைத்து அதன் ஒரு பகுதி யாக, அதற்குப்பட்ட ஒரு பகுதி யாக—ஒரு பெரிய உண்மைக் குள் அடங்கி நிற்கும் ஒரு சிறு உண்மையாக; ஒரு முழுப் பொருளுக்குள் அடங்கி இயங் கும் அதன் ஒரு பகுதியாக— பார்க்கிறுனு என்று பரிசீலிக்க வேண்டும். அப்பொழுதுதான் எந்த இலக்கிய கர்த்தாவையும் விமர்சிக்கும்பொழுது, நாம் ஏதோ தற்காலிக விருப்பு வெறுப்புகளால் தூண்டப்பட் டோ, கோபதாபங்களுக்கு இரை யாகியோ குறிப்பிட்ட எழுத் தாளனைத் தூக்கிப் பிடிக்கவோ, கீழிறக்கிவிடவோ செய்கிறோம் என்கிற நிலை ஏற்படாது. சமு தாயத்தின் மேன்மை தங்கிய உண்மையைச் சித்தரிக்கும் எந்த எழுத்தாளனையும் அரசி யலைக் காரணங் காட்டியோ, தத்துவதிருஷ்டியைக் காரணங் காட்டியோ, அல்லது மனக் குரோதங்களின் காரணத் தாலோ சிறுமைப்படுத்துவது என்பது நடக்கிற காரிய மல்ல. புதுமைப் பித்தன் சொல்வது போல, "நல்ல இலக்கிய மென்றுல் எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத்துக் கொண்டாலும், இலை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும் பனை மரத்தில் ஊசியைச் சொருகிக் கொண்டு சுமந்து நடந்த பரமார்த்த குருவின் சீடர்கள் போல, எத்தனைபேர் சுமந்து வந்தாலும், பரங்கிக்காய் குதிரை முட்டையாகி விடாது." அதனுல் தான், விமர்சனத்தின் நோக்கம் இலக்கிய கர்த்தாவைத் தாக்கு வதோ தாங்குவதோ அல்ல. விமர்சனத்தின் நோக்கம் வாழ் வின் முழுஉண்மையை, சமுதாய உண்மையை, இன்னும் ஒரு

அங்குலம் ஆழமாக உய்த்துணர அந்தக் குறிப்பிட்ட இலக்கிய கர்த்தாவின் படைப்புக்கள் உதவுகின்றனவா என்று பார்ப்பதே, அந்தச் சமுதாய உண்மையை எடுத்துக் காட்டி முன்னேறுவதே இலக்கிய போர்க்குரிய அம்சம்.

புதுமைப்பித்தனின் தனிநபர் உலகும், அவர் கண்டு வெறுத்த உலகும் பரிசீலனைக்குரியன. நிலப்பிரபுத்துவப் பிடி பலமாயுள்ள நெல்லை ஜில்லா; அதில் ஒரு சிறு நிலச்சுவான்தார் குடும்பத்தில் அவர் பிறந்தார்; மகாவிஷ்ணுவின் பத்தாவது அவதாரமாக உதித்து இந்த நாட்டை உய்விக்க வந்தவனே வெள்ளைக்காரன் என்று திடமாக நம்பியவர் அவர் தகப்பனர். தகப்பனர் தலைமையில் அக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த புதுமைப்பித்தன் இந்தப் பிற்போக்கான சூழ்நிலையைக் கண்டவர் மட்டுமல்ல, நேரடியாக அதன் கோர பலன்களையும் அனுபவித்தவர். வீட்டைவிட்டு வெளியேறி விட்டவர் புதுமைப் பித்தன். சொத்துப் பிரிவினை செய்து, தகப்பன்-மகன் உறவு முறிந்தே போயிற்று. நிலப் பிரபுத்துவ எண்ணங்களின் ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் அவை. இந்த நிலப்பிரபுத்துவக்கால எண்ணங்கள் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் ஏற்படுத்தி விட்ட கோர நிலையை புதுமைப் பித்தனின் பல கதைகள் மறக்க முடியாதவகையில் சித்திரித்துள்ளன. கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட ஒரு இளம் பெண்ணின் மனோ வேதனை (கல்யாணி); இளமையில் கைம் பெண்ணாகிவிட்டு ஏங்கித் தவிக்கும் ஒரு பிராமணப் பெண் (வாடா மல்லிகை); ஒரு துண்டு நிலத்துக்காக கிராமத்தைச் சீரழிக்கிற நிலப்பிரபுக்களின் பேயாட்டம் (நாசகாரக் கும்பல்); கல்யாணச் சந்தையில் பெண்ணை விலை பேசும் கோரக் காட்சி (ஒப்பந்தம்); ஆண் ஆணவத்தின் கீழ் இயங்கும் சமுதாயக் கொடுமை (கோபால புரம், மன நிழல்); நிலப்பிரபுத்துவக் கொடுமையினால் கசக்கப் பட்டு தேயிலைத் தோட்டத்துச் சுரண்டலினால் நசுக்கப்படுகிற உழைப்பாளிகளின் நிலை (துன்பக் கேணி); யதார்த்த வாழ்வின் கோர உண்மைகளை மறைக்கும் மதத்தின் நயவஞ்சக நடைமுறை (கொடுக்காப்புளி மரம்); சுரண்டல் சமுதாயம் தனது ஒழுக்கத்துக்கு கற்பு என்னும் மெருகு பூசிக்கொள்ள முயற்சிக்கும் வீண் முயற்சி (பொன்னகரம், வாழ்க்கை); நிலப்பிரபுத்துவஎண்ணங்களின் பிடியில் உழலும் சமுதாயம் (கடவுளின் பிரதிநிதி); பெண்ணுக்கு ஆண் சட்டம் செய்வது (அகல்யை); இப்படி பல கதைகள், பல கோணங்களிலிருந்து நிலப்பிரபுத்துவத்தின் கோர உண்மையைச்சித்திரிக்கின்றன. தீவிரமாகக் கண்டிக்கின்றன.

நிலப்பிரபுத்துவக் கொடுமைகளையும், உண்மைகளையும்

மட்டும் அவர் பார்க்கவில்லை. வளர்ந்து வரும் முதலாளித்துவம் தன் பங்குக்குக் கூட்டித் தந்த சுரண்டலின் கொடுமை; தன் பங்குக்கு நிலப்பிரபுத்துவ ஆசார ஒழுக்கங்களை தனக்கேற்றபடி திருத்தி யமைத்துக் கொண்டு ஒரு போலி பகுத்தறிவையும் ஒழுக்கத்தையும் ஒரு போலி வாழ்வையும் நிலைநிறுத்த முயற்சிப்பதன் கோமாளித் தனம்; அதோடு, ஏகாதிபத்திய வாதிகள் நாட்டில் உலாவவிட்ட பல போலி கருத்துக்கள், பண்பாடுகள்; இந்தச் சுரண்டலும், ஒழுக்க முறையும் மனிதனின் உடலைச் சுரண்டுவது மட்டுமன்றி, உள்ளத்தையும் வற்ற வைத்து, மனங் குன்றி செயலிழக்கச் செய்யும் கோரம்; இவையும் புதுமைப் பித்தன் பொது வாழ்வில் கண்ட உண்மைகளே. பொது வாழ்வில் மட்டுமல்ல, தனது சொந்த வாழ்வில், சொந்த அனுபவமாக அனுபவித்துக் கண்ட உண்மைகளே.

சுரண்டும் உலகில் கலைஞனும், கலையும் படுகிற பாடு (நிசமும் நினைப்பும், வாக்கும் வக்கும்); செயலிழந்த மனிதர்கள் (ஒரு நாள் கழிந்தது); வறுமைப் பேயுடன் உயிருக்குப் போராடும் அன்றாடப் போரின் கோரம் (சார், நிச்சயமா நாளைக்கு; நிசமும் நினைப்பும்); பண நாயக உலகில் கானல் நீராய்க் காட்சி தரும் இன்பம் (சணப்பன் கோழி); சுரண்டல் சமுதாயத்தின் ஈவிரக்கமற்ற தன்மை (தெரு விளக்கு); படைக்கும் மனிதனை யந்திரமாக்கும் முதலாளித்துவ "நாகரீகம்" (இது மிஷின் யுகம்); பழைய ஒழுக்கமும் போய், புதிய ஒழுக்கமும் இன்றி, போலி வாழ்வு நடத்தும் போலி மனிதர்கள் (முட்டாள் வேணு, விபரீத ஆசை); வாழ்க்கைக்குச் சம்பந்தமற்ற மேலை நாட்டுத் தத்துவங்களின் போலித் தனம் (இரு உலகங்கள்); மனிதப் பண்புகளை மறுக்கும் அறுக்கும் முதலாளித்துவ உலகின் நியதி (சொன்ன சொல் நல்ல வேலைக்காரன்); நிலப் பிரபுத்துவ வாழ்வைச் சீர்படுத்தி "முன்னேற்றும்" முதலாளித்துவத்தின் முயற்சியும், ஒழுக்கமும், நியதியும் (கரியுக குசேலர்); உழைப்பாளர்க்கு வாழ்வின் இன்பத்தை நுகர்ந்தனுபவிக்க உரிமை கிடையாது, சந்தனம் அரைக்கக் கடமை யொன்றிருக்கிறதே யொழிய, சந்தனத்தைத் தொட்டு முகர்ந்து பார்க்க உரிமை கிடையாது (காளி கோவில்); கஷாய வேடமணிந்த போதிலும் முடிவில் சொத்துப் பித்து வென்றுவிடும் காட்சி (சித்தி); இப்படி பல கதைகளில் புதிய ஏகாதிபத்ய முதலாளித்துவ "பண்புகளையும்", "ஒழுக்கங்களையும்", அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் புதுமைப் பித்தன் சித்திரிக்கிறார்.

நிலப் பிரபுத்துவப் பண்புகளையும் உண்மைகளையும் ஒரு பக்கத்தில் நிராகரிக்கிறார், கண்டிக்கிறார், எதிர்க்கிறார், போராடுகிறார். மற்றொரு பக்கத்தில் புதிய முதலாளித்துவத்தின் நாகரீகப்

பண்புகளையும், உண்மைகளையும், நிராகரிக்கிருர், எதிர்க்கிருர், போரிடுகிருர்.

புதுமைப்பித்தன் ஒரு கலகக்காரர்.

ஒரு விஷயத்தில் அவருக்குப் பிரமைகள் என்பவை அணுப் பிரமாணம் கூடக் கிடையாது. அது என்ன? நிலப் பிரபுத்துவப் பண்புகளை எதிர்த்து முதலாளித்துவம் போராடுவதாகப் பாசாங்கு செய்கிறதே—ஏதோ புதிய மனிதத்துவப் பண்புகளைப் புகுத்தி வளர்க்கப் பொவதாகத் தம்பட்டமடிக்கிறதே-இந்தப் பசப்பலில், பாசாங்கில், புதுமைப் பித்தன் மயங்கி மதியிழக்கத் தயாரா யில்லை.

மனிதர்களிடையே மனிதனுக வாழும் புதுமைப்பித்தனுக்கு, கலைக் கண்ணும் கவிதையுள்ளமும் படைத்து (அதாவது, ஐந்தோடுகூட ஆருவது அறிவையும்கூடுதலாகப் படைத்து) நிற்கும் புதுமைப் பித்தனுக்கு இந்த முன்னேற்றத்தின் போலித்தனம் இயல்பாகவே பளிச் சென்று தெரிகிறது எனவே, அதை நிராகரிக்கிருர். அதை எதிர்த்துக் கலகம் செய்கிருர்.

எப்படிக் கலகம் செய்கிருர்? தான் ஒரு கலைஞன் என்ற வகையில்! யதார்த்த வாழ்வில் உழைக்கும் சக்தி (உழைப்பாளி மக்கள்) சுரண்டல் தளையிலிருந்து விடுபடக் கலகம் செய்கிறதே அதுபோல யதார்த்த வாழ்வில் சுரண்டல் சமுதாயம் சிறைப்படுத்தி வைத்திருக்கும் கலையின் மீதுள்ள கட்டுகளை உடைத்தெறிய, கலைஞன் என்கிற தோரணையில் கலகம் செய்கிருர். அதன் விளைவாகவே, புதிய புதிய கலை வடிவங்களை அவர் தேடிச் சென்ருர்; அக்கலைவடிவங்களில் வார்த்தெடுக்கப் புதிய புதிய உண்மைகளைத் தேடிச் சென்ருர். தமிழ்க் கலை இலக்கியத்தில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமைப் பித்தன் சாதித்த மாற்றங்கள் இந்தக் கலகத்தின் வெளியீடுகளே. அவரது மனிதத்துவப் பண்பு, அநீதிகளைக் கண்டு வெளிப்படும் உள்ளக் கொதிப்பு, ஆவேசத் துடிப்பு, பிரமைகள் ஒழிந்த பார்வை—இவைதான் புதுமைப் பித்தன், கலையில் உருவ உள்ளடக்கத் துறைகளில் சாதித்த சாதனைக்கு ஊற்றுக் கண்கள்.

கலைஞனின் வேதனையைச் சமுதாயம் புரிந்துகொள்ள முடிகிறது, கலைஞனின் போராட்டத்தைச் சமுதாயம்—குறிப்பாக, போராடும் சமுதாய சக்திகள்—புரிந்துகொள்ள முடிகிறது கலைஞன் நடத்தும் போரில் சம்பந்தப் பட்டுள்ள மகத்தான பிரச்சினைகளைப் போராடும் உலகம் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனெனில் சமுதாயம் தனது விடுதலைக்காக நடத்தும் போரின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகக் கலைஞனின் கலகத்தைக் காண்கிறது. பாரதியையும், பாரதிதாசனையும் இப்படித்தான் சமுதாயம் புரிந்துகொள்கிறது.

ஆனால்........?

சமுதாயத்தின் விடுதலைப் போரை கலைஞன் தனது கலகத்தின் ஒரு பகுதியாக (இது எனது குறைந்தபட்சக் கோரிக்கை) கருதி புரிந்து கொள்கிறானா? சமுதாயத்தின் விடுதலைப் போர் என்கிற மகத்தான உண்மைக்கு கலைஞன் நடத்தும் கலகம் உள்ளடங்கிய ஒரு பகுதி உண்மை என்று பார்த்து (இது எனது முழுக் கோரிக்கை) புரிந்து கொள்கிறானா? இது ஒரு கேள்வி: நான் எழுப்பும் கேள்வியல்ல. யதார்த்தத்தின் கேள்வி இது, கண்டிப்பு இது, கட்டளை இது.]

கலையின் விடுதலை சமுதாய விடுதலையைச் சார்ந்துள்ளது. கலைக்குள்ள விலங்கு சமுதாயத்துக்குள்ள விலங்குகளின் ஒரு அம்சம். கலைக்குள்ள பலவீனம் சமுதாயத்தின் பலவீனத்தின் ஒரு பகுதி. அதனால்தான் சமுதாயப் புரட்சிகள் நடக்கிற காலத்திலும், பக்குவம் பெறுகிற காலத்திலும் கலைகள் விடுதலை பெற்று புதிய தேஜசுடனும், புதிய வலிமையுடனும் வளர்ந்து மிளிர்கின்றன.

கலைஞனின் விடுதலைப் போர், கலைக்கு விடுதலை தேடும் கலைஞனின் போர், சமுதாயத்துக்கு அப்பாற்பட்ட, சமுதாயப் போருக்கு அப்பாற்பட்ட, ஒரு போராட்டமாக நடத்தினால் என்ன ஆகும்? புதிய பிரமைகளுக்கு கலைஞன் இருப்பிடமாகி இரையாவான். கலை கலைக்காகவே என்னும் கற்பனை உலகில் விடுதலையைக் காண்பான் கலைஞன். மக்களிடமிருந்து பிரிந்துவிடுவான். நிராசையடைவான். மாயாலோகத்தைத் தேடுவான். இமயத்தில் சஞ்சரிக்கத் தொடங்குவான். இலட்சியங்கள் பொய் என்கிற இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு திரிவான்; தத்துவங்கள் பொய் என்கிற ஒரு தத்துவத்தை ஊன்று கோலாகக் கொள்வான். வாழ்வு பொய், வாழ்க்கை போர் பொய், ரசானுபமே வாழ்வின் கலையின் நோக்கம், என்று பேசுவான். அவனது கலையும் பலவீனப்படும், மங்கும். தானும் சமுதாயமும் பழைய படியேயிருப்பார்கள். விடுதலை யாருக்குமில்லை. பழைய உலகம் பழைய படியே சென்று கொண்டிருக்கும்.

கலகக்காரர் புதுமைப்பித்தன் நிலை என்ன? கேடான நடைமுறைச் சமுதாயத்தை நிராகரித்த புதுமைப்பித்தன் அதோடுகூடவே புதிய சமுதாயத்திற்குப் போராடும் சக்திகளையும், முயற்சிகளையும், ஒரேயடியாக நிராகரித்தார். எலிகள் தொந்தரவைத் தவிர்க்க வீட்டையே எரித்துக் கொண்டார். பழைய காலப் பண்புகளைச் சாடியவர் புதிய பண்புகளும் பொய் என்று நிராகரித்தார். ஏகாதிபத்ய நிலப்பிரபுத்துவப் பிடியிலுள்ள சமுதாயத்தின் கேடுகளை எதிர்த்த முதலாளித்துவத்தின் போரை போலி என்று நிராகரித்த புதுமைப்

பித்தன், எல்லா போர்களையும் போலி என்று தீர்ப்புகூறி விட்டார். ஒன்றும் பிரயோஜன மில்லை என்று கைவிரித்தார், பெருமூச்சு விட்டார். போராடுவது வீண். முட்டாள்தனமாய் புரட்சி, புரட்சி, நம்பிக்கை, நம்பிக்கை, புதுமை, புதுமை என்று கத்திக் கொண்டு விட்டில் பூச்சி விளக் கொளியைச் சுற்றிவந்து முத்தமிட்டு மடிகிற மாதிரி மக்கள் மடிய வேண்டியதுதான் என்று கருதினார். இன்றேல், உணர்ச்சியையும் உணர்வையும் மீறி சமரசம் செய்து கொண்டு விட வேண்டியது, அழகு நுகர்ச்சியில் ஈடுபட்டு விட வேண்டியதுதான்.

"நிசமும் நினைப்பும்" என்ற கதையில் ஆரம்பபகுதியும் மத்தியப் பகுதியும் சுரண்டல் அநீதியை எதிர்த்து புலி போல் பாய்கிறது. முடிவில்? பூனை போல் பதுங்கி விடுகிறது. போராடிப் பயனில்லை என்ற விரக்தி தவிர்க்க முடியாதபடி வந்தடைகிறது.

"பக்த குசேலா" புதுமைப் பித்தனின் தத்துவ திருஷ்டிக்கும், கலை வன்மைக்கும் கட்டிய ஒரு கோவில் போல் இருக்கிறது.

ஏமாற்றமே அகண்டாகாரமாய் நிரம்பிய இந்த வாழ்வில் இன்பத்தின் துளிகளை, பருக்கைகளை பொறுக்கிப் பொறுக்கித் தின்னும் ஒரு ஒட்டுப் பொறுக்கியை புதுமைப்பித்தன் சித்திரிக்கிறார். அவரது கலையின் வலிமைக்கு அந்தச் சிறுமி ஒரு சான்று. பழைய நிலப்பிரபுத்துவ எண்ணங்களின் உடலும் உயிருமாய் குசேலர் காட்சி யளிக்கிறார். அந்த உலகின் மனிதத் தன்மையற்ற லொடலொட்டைத் தனத்துக்குக் குசேலர் ஒரு எடுத்துக்காட்டு இது புதுமைப்பித்தனின் கலை வன்மைக்கு இரண்டாவது மகத்தான சான்று. இந்தக் குசேலரை உய்விக்கவும், இன்னும் இந்த நாட்டையே உய்விக்கவும் பிறந்த புதிய கிருஷ்ண பரமாத்மாதான், கிருஷ்ணசாமி சர்மா (ஆலை முதலாளி). இவருடைய கீதோபதேசம் கர்ப்பத்தடைப் பிரச்சாரம்தான். காலத்திற்கேற்ற கருத்து வேண்டும். பழையதைப் பிடித்துக்கொண்டு தொங்கக்கூடாது, பாருங்கள்!

கிருஷ்ணசாமி சர்மா (முதலாளித்துவம்) நிலப்பிரபுத்துவத்தைப்பற்றி தீர்ப்பு கூறுவதைக் கேளுங்கள்': "இத்தனை காலமா ஒரே 'ரட்'லெ (rut- பழைய தேய்ந்த பாதை) போய்ப் போய் நம்ம திறமையே நாசமாய்ப் போச்சு, நமக்கு 'அட்ஜஸ்டிங் கபாஸிடி' போயிட்டுது — சனாதன தர்மம் இன்னு அழுகவே அழுகாத கத்தரிக்காய் இன்னு நினைக்க ஆரம்பிச்சதிலேதான் இந்த வினை பிடிச்சுது! —ஒன்றுமில்லே—அந்தக் காலத்திலே தான் 'அட்ஜெஸ்ட்மெண்ட்' இல்லாமல், 'புடிச்சு வச்ச பொம்மை மாதிரியா இருந்து வந்தான்

கள். இப்பொ எதெடுத்தாலும் பயம்......சின்ன மாறுதல் என்ருல் போதும்......அதெச் செய்யறதற்குப் பதிலா 'கல்ச்சர்டா' இங்கிறது, மதம் இங்கிறது ;... ஏன் பேசமாட்டான் அபேத வாதத்தைப் பற்றி..."

இது முதலாளி சர்மா (கரியுக சிருஷ்டியான பரமாத்மா) செய்யும் கீதோபதேசம். "ஏன் பேச மாட்டான் அபேத வாதத்தைப் பற்றி......" இந்த ஒரு வரியில் முதலாளித்துவத்தின் பயத்தை, அதன் முற்போக்குச் சண்டையின் போலித்தனத்தை, புதுமைப்பித்தன் தோலுரித்துக் காட்டி விடுகிருர். இது புதுமைப் பித்தனின் கலைத்திறனுக்கு மூன்ருவது சான்று.

திவ்யப்பிரபந்த பாடல் குசேலரின் நிலப்பிரபுத்துவ எண்ண உலகத்துக்குப் பின்னணியாயமைகிறது என்ருல், கிருஷ்ணசாமி சர்மாவின் கீதோபதேசத்துக்குப் பின்னணி இசையாய் புதுமைப்பித்தன் "வாங்க வாங்களடி லவண்டிகளா" என்ற கிராமபோன் சங்கீதத்தை அமைக்கிருர். புதிய பூர்ஷ்வா கலாரசனைக்கு நல்ல பிரதிநிதி அந்தப் பாட்டு. இது புதுமைப் பித்தனின் கலை நுணுக்கத்துக்கு நான்காவது சான்று.

அப்புறம் ?

கதையின் முடிவு ?

கிருஷ்ணசாமி சர்மா தனது கர்ப்பத் தடை பிரசாரத்துக்கு சாட்சிப் பிரமாணமாய் உபயோகித்துக் கொள்ள குசேல குடும்பத்தை 'ரிக்ருட்' செய்கிருர் ; நவீன கிருஷ்ண பரமாத்மா நவீன குசேலருக்கு திருவனந்தபுரத்தில் வீடு வாங்கிக்கொடுத்து அமர்த்தி விடுகிருர். வயது வந்த குசேலர் பிள்ளைகளை தனது மில்லில் தொழிலாளிகளாகச் சேர்த்துக் கொள்வதாக திருவாய் மலர்ந்து அருளுகிருர். குசேலர் வறுமைக்கு முடிவு இது.

புதுமைப்பித்தனின் கலைத் திறனுக்கும் இந்த முடிவின் போக்குக்குமுள்ள உறவு என்ன ? ஆலோசியுங்கள்.

ஆலோசிக்க இன்னுமிருக்கிறது. இக்கதையில் சர்மாவின் மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் ஸ்ட்ரைக் செய்வதாக சித்திரிக்கப்படுகிறது. போலீஸ் அட்டகாசம், கைதுகள்,விசாரணை, மில்கதவடைப்பு, எல்லாம் நடக்கிறது. என்னமோ பிரமாதங்கள் நிகழவிருக்கின்றன என்று நீங்கள் படபடப்புடன் எதிர்பார்ப்பீர்கள். அது வீண். முதலாளி சர்மாவின் மகன் கையில் ஒரு புதிய காமிரா (சினிமா பிடிக்கும் காமிரா) கிடைத்ததால், ஒரு சீன் எடுப்பதற்காக அவன் தொழிலாளிகளை ஸ்ட்ரைக் செய்யும் பாவனையில் 'ஆர்ப்பாட்டம் செய்ய உத்தரவிட்டதின் விளைவு தான் இந்த ஸ்ட்ரைக்கும், போலீஸ் கெடுபிடியும்! சாவதானமாக இந்தக் கூத்தை விவரிக்கிருர் புதுமைப்பித்தன். சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சி

கதையில் வக்கரித்துக் கொண்டு பிரதிபலிக்கிறது.

புதுமைப்பித்தனின் கலைத் திறனுக்கும், கலைப் பண்புக்கும் இந்தக் காட்சிக்கும் என்ன சம் பந்தம்? யோசியுங்கள்.

போராடும் மக்கள் என்றால், புதுமைப்பித்தனின் கலைக்கண் மங்குகிறது, கலையுள்ளம் குமைந்து ஒடுங்குகிறது. கலைக் கை தனது வலிமையை இழக் கிறது. அனாயாசமாய் ஒரு சொல்லால், ஒரு வரியால், ஒரு கதையால் உலகளந்த பெருமாளாகக் காட்சி தரும் புதுமைப் பித்தன் உழைப்பாளி மக்கள் என்றவுடன் மீண்டும் வாமனனாகி விடுவதின் காரணமென்ன, அர்த்தமென்ன?

"பக்த குசேலா," புதுமைப் பித்தனின் இலக்கியத்துக்கு ஒரு கோவில் மாதிரி என்றேன். கோவில் பிரகாரங்கள் வானை முட்டுகின்றன. ஆனால் அதன் கர்ப்பக் கிரஹம் குறுகி இருண்டு கிடக்கிறது. ஏன்?

யோசியுங்கள்!

(அடுத்த இதழில் முடியும்)

காதலும் சாதலும்

◆◆

முகவை இராஜமாணிக்கம்

2

சிலம்புபற்றி அதிகாரம் செய்தானே-இளங்கோவடிகள்-சிலப்பதிகாரம். ஏதற்காக? சிலம் பணிந்த காலழகி கண்ணகியைக் கைப்பிடிக்கிறான், அப்பாவிக் கோவலன். அவளை மறந்து, அற்புத ஆடலழகி மாதவியைக் கூடுகிறான். பின்னர், அவளையும் கைவிட்டு, மீண்டும் கண்ணகியை அடைகிறான். வேற்றூர் செல்கிறான். வாழும் வகை தெரியாமல், வெட்டுண்டு மடிகிறான். கண்ணகியும் ஆவியை விடுகிறாள். அதற்குப் பிறகுதான் அவளுக்குக் கற்புத் தெய்வம் என்று பட்டம் கிடைக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியனும் உயிர் விட்டதால்,அவன் பத்தினியான கோப்பெருந் தேவியும் ஆவி துறக்கிறாள். மாதவி, கைம்மைக் கோலத்திலேயே காலத்தைக் கழிக்கிறாள்.

இப்படிப்பட்ட பரிதாப வாழ்வு, இரு பாலாருக்கும் ஏற்படக் கூடாதுஎன்று எச்சரிக்கத்தான், இந்த உள்ளடக்கத்தை இலை மறை காய்போல வைத்து, தீஞ்சுவைக் காவியரசம் சொட்டச் சொட்டத் தீட்டியுள்ளான், இளங்கோவடிகள், சிலப்பதிகாரக் காவியத்தை.

காதல் இதயத்திலிருந்து உருகி வழிந்த கண்ணீர்த் துளி என்கிறான் வங்கக் கவி தாகூர்—காதலின் அழியாச் சின்னமான தாஜ்மஹாலை. காதலர்கள் வாழ்வில் கண்ணீர் சிந்தக்கூடாது என்று எச்சரிக்கத்தான் ரோமியோ-ஜூலியத் காதற் பலியைக் காவியமாக்கினான், பெரும் புலவன் ஷேக்ஸ்பியர். ஏமாருத காதல் வாழ்வு தழைக்கவேண்டுமென்பதற்குத் திசைகாட்டிதான், லைலா-மஜ்னு காதற்கதை.

சமீப காலத்தில், வேலூரில் நடந்த ஒரு காதற்பலி. காதல் அரும்புகள் இரண்டைப் பூக்காது காய்க்காது உதிர்த்துவிட்டார்கள், அந்த இளங்காதலர்கள் கஜராஜ்-சரோஜாவின் பெற்றோர்கள். ஒட்டிய அந்த இரு உள்ளங்களையும் வெட்டிப் பிரித்துப் பிணமாக்கிவிட்டார்கள். இப்

படிப்பட்ட துன்பவியற் காதல் நாடகம், தமிழ்நாட்டில் இனி நடை பெறலாகாது என்பதை எடுத்துக்காட்டத்தான்,

..."ஓட்டும் இரண்டுளத்தைத் தம்முள்
ஓங்கிய காதலினைப்
பிட்டுப் பிட்டுப் புகன்றார் அதைப்
பெற்றவர் கேட்கவில்லை
குட்டை மனத்தாலே தங்கள்
கோபப் பெருக்காலே
வெட்டிப் பிரிக்க வந்தார் அந்த
வீணையை நாதத்தினை"...

என்று படிப்போர் உள்ளமுருகும் வண்ணம், **காதல் மகத்வம்** என்ற தலைப்பில், கண்ணீர்வடித்துப் பாடியுள்ளான், புலவன் பாரதிதாசன்.

காதல் உணர்வு பெற்றவர்கள், அறம் பிறழாமல், நிறை தவருமல், ஒருவரைப் பிரிந்த பின்பும், காதல் திண்மையினுல் சாகாமல் வாழ்ந்திருப்பார்கள். உடலின்பம் மட்டுமல்ல - காதல். உடலின்பத்திற்குமட்டும் பெயர்-காமம். காமம் உடலோடு அழியும். காதல், சாவையுங் கடந்து நிற்கும்.

சிறந்த எழுத்தாளர்கள் வரிசையிலே சேர்ந்துவிட்ட கல்கி அவர்களின் நவீனம்–**கள்வனின் காதலியில்** வரும் **கல்யாணி–முத்தையன்** காதல் வாழ்வு பலிக்கவில்லை. முத்தையன் சுடப்பட்டு இறக்கிருன். அதற்குப் பிறகும், அவனை அங்கமெல்லாம்நேசித்த கல்யாணியை, ஆசிரியர் உயிர் வாழ வைத்திருக்கிருர். ஏன்?

இளமை தொட்டே காதற்புனலில் நீந்தத் தொடங்கியவர்கள், கல்யாணியும் — முத்தையனும், ஆனல் சமுதாயச் சூழலால், இருவர் வாழ்விலும் பயங்கரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. இருப்பினும், பண்பு அழியாத அந்த இரு காதற் புருக்களும் வாழ்க்கைக் கூட்டை அடைவதற்கு முன்பு, ஆண் புரு பிரிக்கப்படுகிறது. கல்யாணியின் அவசரப் புத்தியால், அளவுமீறிய காதலால், முத்தையன் சுடப்பட்டு இறக்கிருன். தனது காதலனோடு ஆடிப் பாடிக் கழித்த காதல் நினைவை என்றும் ஏந்தி நிற்பதற்கே, முத்தையன் பிரிந்த பிறகும், உயிர் வாழத் துணிகிருள் கல்யாணி-என்று கதையை முடிக்கிருர், கல்கி. அதனல் காதல் பண்புக்கு உயிர்கொடுத்து, உணர்வு ஊட்டுகிருர்.

காதல் பண்பில் ஊறியவர்களுக்குப் போலி வாழ்வு கசக்கும். அமைதியான வாழ்வுதான் இனிக்கும்.

தான் காதலித்த மாது சிம்சனை மணந்து இல்லறம் நடத்துவது என்ற நல்ல முடிவுக்குவந்த எட்டாம் எட்வர்ட் மன்னன், இங்கிலாந்து மன்னன் என்ற பட்டத்தைத் துறந்துவிடப் பதறவில்லை.

சிம்சன? சிம்மாசனமா?—சிம்மாசனத்தை உதறினன். சிம்சனைக் கைப்பிடித்தான்.

காதலா? காவலா!— காவல்

வேண்டாம். காதல் வேண்டும் என்றான்.

பிடியா? முடியா?— முடியைத் துறந்தான். பிடி (பெண் யானை போன்றவள்) யைக் கைப்பிடித்தான்.

இல்லற சுகமா? அரசபோகமா? அரசபோகத்தை மறந்தான். இல்லற இன்பம் பெறத் துணிந்தான்.

இதுதான் காதல்!

ஆனால், இதைவிட உயர்ந்தது புனிதமானது-இலட்சியக்காதல். இலட்சிய நோக்கோடு வாழும் உத்தமக் காதலர்கள், உயிர்போனாலும், உறுதி பிறழ மாட்டார்கள்; இலட்சியம் தவறமாட்டார்கள். மனதிற்கொண்ட இலட்சியத்திற்கு மாசு சிறிதும் நேர மனம் பொறுக்க மாட்டார்கள்.

ஜெக் நாட்டின் இரு இளம் காதல் மணிகள் ஜூலியஸ் புஷிக்—கஸ்டின. தாங்கள் பிறந்த நாட்டின் சேவைக்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்பணிக்கத் துணிந்த கம்யூனிஸ்ட் இளங் காதலர்கள் அவர்கள். அவர்கள் இருவரும் காதலித்து மணம் புரிந்து, இல்லறத்தை நடத்தத் தொடங்கியபோது, பொல்லாத ஹிட்லரின் போர்ப் படை புகுந்தது, அவர்கள் பிறந்த பொன்னாட்டில்.

தங்கள் தாய் நாட்டிற்கு வந்த ஆபத்தை உணர்ந்த அந்தத் தம்பதிகள், தங்கள் காதலின் பேரால் சபதம் செய்து கொண்டனர். என்ன சபதம்?

எதிரி கையில் இருவரில் எவரேனும் அகப்பட நேர்ந்தால், அகப்பட்டவர், அகப்படாதவரைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளக்கூடாது. உயிருக்குப் பயந்து உறவை வெளியிடக் கூடாது என்று தங்கள் காதலின் மீது சபதம் செய்தனர்.

ஹிட்லரது போலீஸ் படையினர் கையில் அகப்பட்டான், புஷிக். சித்திர வதைக்கு ஆளானான். ஆனால், தன்னை யார் என்று வெளியிட மறுத்தான். புஷிக், யாரென அவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். அவன் காதலி கஸ்டினு கைதி செய்யப் பட்டாள். காதலன் முன்னே கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள் காதலி.

காதலன் உடலெல்லாம் இரத்தம் ஒழுகுகிறது. முகமெல்லாம் காயங்கள். பற்களை உடைத்து நொறுக்கி விட்டார்கள். அவன் நிற்கும் கோரக் காட்சியைக் கண்டால், குன்றும் உருகும். கொடும் பாம்பும் மனமிளகும் காதலன், குற்றுயிரும் கொலை உயிருமாய் நிற்கும் காட்சியைக் காணவைத்திருக்கிறார்கள் காதலியை.

இதயத்தைத் தூள் தூளாக்கும் இக் காட்சியைக் கண்ட காதலியின் உள்ளம் எப்படித் துடிக்கும்? உடல் எப்படி நடுங்கும்? இதை ஒரு கணம் நினைத்துப்பார்த்த வீரன் புஷிக், தனது

காதலிக்குத் தங்கள் சபதத்தை நினைவூட்ட, தனது காதலியைத் தேற்ற, அந்த வேதனை நிலையிலும் சிரிக்க முற்படுகிருன். காதலி கஸ்டிஞு, காதலன் உள்ளத்தைப் புரிந்துகொண்டாள்.

"இவன் யாரோ, நான் யாரோ இவனை எனக்குத் தெரியாது" என்ருள், நெஞ்சுரங் கொண்ட கஸ்டிஞு.

இதுதான் காதல் வாசகம்!

மறம் தோற்றது; அறம் வென்றது;
மரணம்தோற்றது;வாழ்வுவென்றது.
சாதல் தோற்றது; காதல் வென்றது.
வெறி சாய்ந்தது; நெறி உயர்ந்தது.

புஷிக் தூக்குமேடை யேறிஞன். தூக்குமேடைக் குறிப்புகள் என்ற இறவா இலக்கியத்தை உலகுக்கு அளித்து வீரத் தியாகியாகி விளங்குகின்ருன். கஸ்டிஞு உயிர் தப்பிஞள். காதலன் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து ஆற்றி நிற்கிருள் இன்றும், அந்த ஜெக் நாட்டுக் காதல் தெய்வம் கஸ்டிஞு!

சாதலையும் வெல்லும் இத்தகைய தூய காதல் வாழ்வு பெற்ருல், மனிதக் குலம் தழைக்கும். சமுதாயம் சிறக்கும். வாழ்க்கையே கலைக்கோவிலாக இலங்கும். இன்பப் பூம்புனல் ஓடையாய்ப் பெருகி வழியும்.

சாதலுக்குச் சாவுமணி யடிப்போம்.

காதலுக்குக் கவிபாடித் துதிப்போம். ★

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணு

ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணு ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

1, ராஜா அண்ணுமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

சிறுகதை

பொற்கலை

ஆலாலசுந்தரம் ★

கார்த்திகை மாதம். முருகனின் கொல்லையில் சோளப் பயிர்கள் மாலைக் காற்றில் அழகிய பசுங்கதிர்களை ஆட்டிச் சலசலத்துக் கொண்டிருந்தன. பச்சைப்பட்டைப்போல சோளப் பயிரின் சோலைகள் நீண்டு வளைந்து தொங்கி ஊசலாடிக்கொண்டிருந்தன.

முருகன் கூலிவேலை முடிந்து அப்படியே தனது கொல்லையைப் பார்த்துவிட்டு வீடுதிரும்பலாம் என்று வந்துகொண்டிருந்தான். சூரியன் மறைந்து, எங்கும் இருள்படர்ந்துகொண்டிருந்தது. பனிக் காலம் ஆரம்பித்துவிட்டிருந்தபடியால் அவன் தனது துணியை நன்ருக இழுத்துப் போர்த்தியிருந்தான். ஏரிச் சாரலில் அமைந்திருந்தது அவனது நிலம். எனவே குளிர் காற்று சற்று அதிகமாகவே இருந்தது.

பயிர்களுக்கு அருகில் வந்து நின்ருன். பயிர்கள் திடமாக வளர்ந்திருந்தன. அவனது மனம் நிறைந்தது. நாலைந்து வருஷங்களாகச் சரியாக விளையாமல்இந்த வருஷமாவது சற்று நன்ருக விளைந்திருக்கிறதே என்றுஎண்ணும்போதுஅவனது உள்ளம் பூரித்துப் போயிற்று. நிலம் என்னவோ கொஞ்சம் தான்—மூன்று வீசம் காணி. அவனது பாட்டன் காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து இன்றைக்கு மூன்று வீசத்தில் வந்து நிற்கிறது. சில வருஷங்களாக நன்ருக விளையாததாலும், வாங்கியிருந்த கொஞ்சங் கடனுக்காகவும் இந்த மூன்று வீசத்தையும் விற்றுவிடலாமென்று சென்ற வருஷம் முருகன் திட்டமிட்டான். ஆனல் அவன் மனைவி அதற்கு இடங் கொடுக்கவில்லை. வீசங்காணியாக இருந்தாலும் நிலத்தை விற்கக்கூடாது என்பது அவளது எண்ணம். இந்த வருஷத்தைப்பொல அடுத்த வருஷமும் விளைந்துவிட்டால் போதும். கடன் அடைந்து கையில் கொஞ்சம் மிச்சமும் இருக்கும்.

முருகன் இப்படி தன்னுடைய சிந்தனையை ஓட்டிக்கொண்டே நின்று கொண்டிருந்தான். அந்தச் சில நிமிஷங்களில் உடலைத் தாக்கும் குளிரைக்கூட அவன் மறந்துபோய்விட்டான்.

அந்தி வானத்தின் செக்கர் அடியோடு மறைந்து இருள் நன்கு கவிந்துவிட்டது. முருகன்

தனது சிந்தனையிலிருந்து விடுபட்டு, கொல்லையைச் சுற்றிப் பார்க்க, நகர்ந்தான். அப்பொழுது அடுத்த பக்கத்திலிருந்து 'கடுக் கடுக்' என்று சப்தம் வந்தது. அடுத்த பக்கம் சென்ருன். ஒரு பெரிய மாடு பயிரை மேய்ந்துகொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்தான். பெரிய தனம் சிவலிங்கம் பிள்ளையின் வண்டிமாடு அது. அந்தப் பக்கம் நெடுக மொட்டையாக அது பயிரைக் கடித்து வைத்திருந்தது. முருகனின் மனம் பதை பதைத்தது. கயிற்றைப் பிடித்து மாட்டை அப்பால் ஓட்டி, அந்தக் கயிற்ருலேயே அதை இரண்டு அடி அடித்தான். மாடு என்ன செய்யும்? ஆனால் முருகனின் ஆத்திரம்...?

தூரத்தில் ராந்தல் எடுத்துக் கொண்டு யாரோ இருவர் வந்து கொண்டிருந்தார்கள். அருகில் வரவர முருகன் வருவது யாரென்பதைப் புரிந்து கொண்டான்.

"வர்றது பெரிய மச்சான் தானே?..." என்று முருகன் குரல் கொடுத்தான்.

"ஆமா, யாரு முருகனு?... ஐயாவுது வண்டிமாடு ஒத்தை கொல்லையிலேயே தங்கிப் போச்சு. அதைத்தான் தேடிக் கிட்டு வரேன்..." என்று சொல்லிக்கொண்டே அருகில் வந்தான் முனுசாமி.

"ஏன் மச்சான் இப்படி கொல்லையிலவுட்டு பயிரை அழிச்சா நாங்க எல்லாம் எப்படிப் பொழைக்கிறதாம். மாடு வச்சிருந்தா அதைத் தொழுவத்தில் கட்டிப்போட்டு வச்சிருக்க வேணுமா? ஏழை பாழை இந்த ஊருல குடித்தனம் செய்யக் கூடாதுன்னு ஒங்க எசமான் நெனச்சிக் கிட்டிருக்காருபோல யிருக்குது..." என்று பொங்கி வந்த கோபத்தில் படபட வென்று கேட்டான் முருகன்.

முனியன் பின்னல் வந்து கொண்டிருந்த பிள்ளைவாளின் பாடியாள் "நீ சொல்லவேண்டியதையெல்லாம் எசமான்கிட்ட வந்து சொல்லிக்கிடவேணும் தெரியுதா? எங்க கிட்ட ஏன் கைவரிசையைக் காட்டுறே?... எல்லாம் எசமாங்கிட்ட வந்து பேசிக்கோ..." என்று தானும் கோபத்துடன் பதில் சொல்லிக் கொண்டே முருகனின் கையிலிருந்து மாட்டின் கயிற்றை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். முனியனும் முருகனும் பின் தொடர்ந்தனர்.

முருகனது குறையைக் கேட்ட சிவலிங்கம் பிள்ளை எப்பொழுதும் போலவே பேசினர். "எண்டா முருகா, மாடு ரெண்டு கதிரைக் கடிச்சுட்டா அதுக்கு என்ன செய்யறது?...வாயில்லா சீவன்; போவுது போ..." என்று குழைந்தார்.

"என்ன எசமான், ஏதோ அரும்பாடுபட்டு பயிரிட்டதை இப்படி மாட்டைவுட்டு அழிச்சா ஏழையின் வயிறு எரியாதுங்களா? ... எங்க வூட்டுலேயும் என்ன கொட்டியா கிடக்குது?... எங்க பொழைப்பிலே இப்படி

மண்ணைப் போட்டா..." என்று முருகன் பேசி முடிக்குமுன், பிள்ளையவர்கள் சற்று அதிகாரத் தொனியோடு குறுக்கிட்டார்.

"பேச்சு எதுக்கடா அதிகமா? ...தெரியாத்தனமா மாடு மேய்ஞ்சுட்டா போவுதுன்னு போக வேண்டியதுதான். போடா, போ...போய் வேலையைப் பாருடா, போ!..." என்று சொல்லிக்கொண்டே சர சர வென்று வீட்டினுள் போய் விட்டார்.

* * *

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள்.

உச்சியிலிருந்து மேற்கில் நகர்ந்தான் சூரியன். முருகனின் மகள் எட்டு வயதுச்சிறுமி பொற்கலையும் அவள் சிநேகிதி லக்ஷிமியும் ஓடைமணற் பரப்பில் தாழம் புதர் நிழலில் வந்து உட்கார்ந்தனர். அவர்களது ஆடுகள் ஓடைக்கரையில் மேய்ந்துகொண்டிருந்தன.

தாழம் புதர் உயர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்தது அதில் வெயிலுக்கு வந்து தங்கியிருந்த பறவைகள் சப்தமிட்டு விளையாடிக்கொண்டிருந்தன. பொற்கலை முழங்கையை தலைக்கு அண்டை கொடுத்து மணலில் படுத்தாள். லட்சுமியும் அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டாள்.

"பொய்க்கலை, எங்களுக்கு எதிர் வூட்டுல இருக்காரே, அந்தத் தாத்தா, நேத்து எங்க அண்ணனுக்கு ஒரு கதை சொல்லிக்கிட்டிருந்தார். அதை நெனச்சா கூட இப்பொ பயமாயிருக்கு!..." என்று பயத்தினால் உடல் சிலிர்க்க லட்சுமி மெதுவாகப் பேச்சைத் தொடங்கினாள்.

'பொற்கலை' என்ற அந்த அழகான பெயர் லட்சுமியின் வாயில் மட்டுமல்ல, ஊரிலுள்ள எல்லோர் வாயிலும் பொய்க்கலையாகத் திரிந்து போயிற்று.

"ஏன் என்ன கதை அது; ரொம்பப் பயங்கரமான கதையா?..." என்று பொற்கலை ஆவலுடன் கேட்டாள்.

"ஆமா...அது அவுரு தம்பியைப்பத்தி. ரொம்ப நாளைக்கு முன்னே, அதாவது இருவது வருசத்துக்கு முன்னே, அவுருக்கு ஒரு தம்பி இருந்தாராம். அப்போ இங்கே ஓடைக் கரையின் ரெண்டு பக்கமும் தாழம் புதர் இருந்துதாம். இன்னும் ரொம்ப அடர்த்தியா காடு மாதிரி இருந்துதாம். தாழம் பூ நெறையா பூத்து தொங்கிக்கினு இருக்குமாம். அவுரு தம்பி அந்தத் தாழம் பூவைப் பறிச்சுக்கிட்டு போயி வெளியூருல எல்லாம் வித்து கைநிறையக் காசு கொண்டாருவாராம். ஒரு நாளு ரெண்டரை ரூபாகூட சம்பாதிச்சிக்கினு வந்தாராம்!...ஒரு சமயம் நெறையா மழை பெய்து இந்த ஓடையில் தண்ணீர் கரை புரண்டு ஓடிச்சாம். அப்போ, ஒரு நாளு அவுரு இந்த ஓடையில் நீந்திவந்து தாழம் புதரு மேல் ஏறி, ரெண்டு பூ பறிச்சுக்கினு மூணாவது பூ பறிக்கப் போனாராம். பறிக்கப் போகும் போது ஒரு நல்லப்பாம்பு அவரு கையில் கொத்திடுத்தாம். பயத்

துல கத்திக்கினே அப்படியே தண்ணியில் தொப்புனு விழுந்துட்டாராம்..." என்று சொல்லி விட்டு அந்தப் பயங்கரமான காட்சியைத் தன் மனதுக்குள் கற்பனை செய்து கொண்டாள் லட்சுமி.

பொற்கலை ஆவலோடு லட்சுமியைத் தூண்டினாள். "உம். அப்புறம், அவுரு என்னு ஆனாரு?..."

"என்ன ஆனாரு!...வூட்டுக்குத் தூக்கி வந்து என்னமோ வைத்தியம் செய்து பார்த்தாங்களாம். ஆனால் சில மணிக்குள்ளே செத்துப் போயிட்டாராம்...அந்தக் கதையை நெனச்சா எனக்கு என்னமோ ரொம்பப் பயமாயிருக்கு..." என்று கூறி முடித்தபோது அவள் உடம்பு மீண்டுமொரு முறை சிலிர்த்தது.

சற்று நேரம் இருவரும் பேசாமல் படுத்துக்கொண்டிருந்தனர். பிறகு லட்சுமி திடீரென்று எழுந்து, "நான் வூட்டுக்கு சீக்கிரம் போகணும். எங்க தம்பி தூங்கி முழிச்சிக்கிட்டு இருப்பான். அம்மா சாயங்காலம் வர்ற வரைக்கும் அவனை வச்சிக்கிட்டு இருக்கணும்...நான் போறேன்" என்று சொல்லிவிட்டு தனது ஆடுகளை ஓட்டிச் சென்றாள்.

அந்தப் பயங்கரமான கதையை நினைத்துக்கொண்டே படுத்திருந்தாள் பொற்கலை. சற்று நேரத்தில் லேசான தூக்கம் அவளது கண்களைப் பொத்தியது.

எவ்வளவு நேரம் அவள் அப்படியே தூங்கினாளோ தெரியாது. தாழம் புதருக்கு அப்பாலிருந்து சிம்ம கர்ச்சனையைப் போல் வந்த குரல் அவளை உலுக்கி எழுப்பியது.

"யாருடா அவன் ஆட்டுக்காரன்?...எங்கேடா போயிட்டே ஆட்டைப் பயிருல வுட்டுட்டு... டேய்?" சிவலிங்கம் பிள்ளையின் குரல், கர்ணகடூரமாக ஒலித்தது. தாழம்புதருக்கு அந்தப் பக்கம் பிள்ளைவாளின் நிலம்.

பொற்கலை திடுக்கிட்டு எழுந்து பயத்தால் துடிதுடிக்கும் இதயத்துடன் தாழம்புதரைச் சுற்றிக் கொண்டு ஓடினாள். காலில் தைத்த முள்ளைக்கூடப் பொருட்படுத்தவில்லை. நான்கு ஆடுகளில் ஒன்று வேர்க்கடலைச் செடியைக் கடித்துக்கொண்டிருந்தது. மற்ற மூன்றும் வேலியோரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. பிள்ளைவாள் விஸ்வரூபமெடுத்து நின்று கொண்டிருந்தார். மேற்கில் அடிவானத்தைத் தொட்டுவிட்ட சூரியன் அவரது நிழலைப் பூதாகாரமாகத் தரையில் விரித்து வைத்திருந்தான்.

"என்ன குட்டி, நீ முருகன் மவதானே? ஆட்டைப் பயிருல மேயவுட்டுட்டு என்ன செய்றே? ஒங்க சோளப் பயிரு வேறே, எங்க வேர்க்கடலை வேறேன்னு நெனப்பா?......" என்று கர்ச்சித்தபடியே பொற்கலையை நோக்கி அடியெடுத்து வைத்தார் பிள்ளைவாள்.

பொற்கலை பயத்தினால் ஸ்தம்பித்து நின்று விட்டாள். இருத

யம் வேகமாக அடித்துக்கொண்டது. "ஒரே ஒரு ஆடுதானே, எசமான், பயிருல இறங்கிட்டுது. மூணும் வேலியிலேதானே மேயுதுங்க...!"என்று நாக்குழறநடுங்கிக்கொண்டே பேசினாள் அந்தச் சிறுமி.

"வேலியில மேய்ஞ்சா மட்டும் அக்கறையில்லையா? இன்னைக்கு வேலியில மேய்ஞ்சா, நாளைக்கு பயிருல மேயுது!...... எதுத்தா கேக்கிற நாயே?......" என்று தனது கையிலிருந்த புளிய மிலாறை அந்தச் சிறுமியின் உடலில் இரண்டு மூன்று முறை பிரயோகித்தார். மேற் சட்டையற்ற அவளது உடலில் ரத்தத் தழும்புகளை எழுப்பின அந்த அடிகள். "அடிக்காதீங்க எசமான்....எசமான்...எசமான்..." என்று அலறித் துடித்தாள் அந்தக் குழந்தை,

"டேய் முனியா, அந்த ஆட்டையெல்லாம் பட்டிக்கு ஓட்டுடா, உம்..." என்று உறுமினார் முனியன் பக்கம் திரும்பி. முனியன் ஆட்டை ஓட்டினான். பிள்ளைவாளும் அவனைத் தொடர்ந்து நகர்ந்தார்.

"சாமி...ஏசமான்...ஆட்டைப் பட்டிக்கு ஓட்டாதீங்க எசமான்! எங்கப்பா என் உசுரை எடுத்துடுவாரு எசமான்... எசமான்..." என்று கதறிக்கொண்டே பிள்ளைவாளின் காலில் விழுந்து அவரது பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் பொற்கலை.

"ஒன் அப்பன் உசுரை எடுத்தா சாகிறது தானே... கழுதை, விடு காலை!..." என்று மீண்டும் கர்ச்சித்துக்கொண்டே தனது காலை வேகமாக உதறி விடுவித்துக்கொண்டு பெரிய தனம் பிள்ளைவாள் நடந்தார்.

பொற்கலை 'ஐயோ' என்று கீச்சிட்டு அலறிக்கொண்டு வேர்க்கடலைச் செடிகளின்மேல் சுருண்டு விழுந்தாள். பிள்ளைவாளின் லாட மடித்த செருப்பு அந்தச் சிறுமியின் வயிற்றில் காயத்தை உண்டாக்கியிருந்தது. வலி பொறுக்க மாட்டாமல் முனகினாள் அவள்.

சூரியன் மேலை வானத்தில் மறைந்து விட்டான். இருள் கவிந்துகொண்டிருந்தது.

"நாசமாப்போறவனே உன்னை வெடுக்கினு பாம்பு கடிக்க!" என்று வாய்விட்டுச் சபித்தான் பொற்கலை.



கடலே....!

கு. சின்னப்பா பாரதி

காலமெலாம் ஏழை மக்கள் வடித்த கண்ணீர்,
காணவில்லை என்றுநீ கடலே இந்தக்
கோலத்தைச் செய்துவிட்டாய், கொடுமை அந்தோ!
கொட்டுகிறார் கண்ணீர்தான் குடித்தேவாழு!

உன்புகழை எடுத்தியம்ப உலகமீதில்,
ஒருவருமே இல்லாத அந்தக்காலை,
மண்ணுலகில் தமிழ் மக்கள் உந்தன் உள்ளே,
மருந்தெனும் உப்பெடுத்தார், புகழைச் சேர்த்தார்.

இருட்டிவிட்டால் மீன்முதலை செய்யுந் துன்பம்,
இயலாமல் நீ தேம்பிக் கதறும் காட்சி,
பொறுக்காமல் புகழ்தமிழர் காவல்காக்க,
புறப்படுவார் படகேறித் தூக்கமின்றி.

முத்துப் பவழம் எனுங்கண்ணால் உலகைப் பார்க்க,
முடியாமல் மண்ணோக்கித் துயிலும் நும்மை,
எத்தனையோ தமிழ் மக்கள் இரவுபகல்,
எண்ணாது துயில்கலைத்துத் துளக்கம் செய்தார்.

எத்தனையோ பாடுயர்த்தி உந்தன் பேற்றை
ஏற்றிட்டார் புகழென்னும் உச்சி மேட்டில்.
செத்துநிதம் தமிழ்மக்கள் மிதக்க நீரில்,
சிரிக்கின்றாய் கரைமோதி இதுவோ நீதி,

பெருங்கடலே! நீ செய்த கொடுமையின்றிப்
பெற்றமகன் பெருங்காற்றால் உற்றகேட்டை
உருண்டோடித் தமிழகத்தில் உற்றுப் பாரு!
உருண்டதலை, விழ்ந்தமரம் கணக்கு முண்டோ?

ஈவிரக்கம் அற்றிருக்கும் கடலே! காற்றே!
இதுதானோ தமிழர்க்குக் காட்டும் அன்பு!
சாவிற்கும் அஞ்சாத தமிழர் கூட்டம்,
சாலையிலே தவிக்கின்றார் பிச்சை கேட்டே!

கடந்த தினம் மாலையிலே உம்மைப் பார்த்தேன்!
கதறலுடன் கண்ணீரும் வடித்தே நின்றாய்
மடைமையினால் நேர்ந்த பிழை மன்னிக்கின்றோம்
மறுமுறையும் இந்தப் பிழை செய்திடாதே!

கோ மாதாவைப் பவுண்டில் அடைத்து வைப்பதா? என்று அவரது ஸத்தர்ம ஹிருதயம் உருகிக் கரைந்தது.........

அறத்தின் விழ்ச்சியாக அவருக்குப் பட்டது....

ஆனால் இந்த அறவுணர்ச்சிக்குப் பின்னணியில் அரண் செய்து நின்றது ஆதாய உணர்ச்சி தான்........

●

அறத்தின் வீழ்ச்சி

○

மூலம் :
யஷ்பால்

தமிழாக்கம் :
குமாரி ஆர். சாவித்திரி

ஹோமியோபதி டாக்டர் திவாரியும் நாங்களும் வருடக் கணக்காக லக்ஷ்மணபுரியில் அண்டை வீட்டுக் காரர்களாக வாழ்ந்து வருகிறோம். பல தடவைகள் அவசியமான சமய சந்தர்ப்பங்களில் பரஸ்பரம் பல உதவிகள் செய்துகொண்டிருக்கிறோம். எங்கள் இருவரது உறவினர்களுக் கிடையிலும் கூடப் போக்கு வரத்து இருந்து வந்திருக்கிறது. இத்தேர்தல்!—அது நாசமாய்ப் போகட்டும்! சென்ற தேர்தலில் அவர் மஹாசபையை ஆதரித்தார்; நாங்கள் காங்கிரஸை ஆதரித்தோம். இதனால் எங்களுக்குள் சிறிது மனவேற்றுமை ஏற்பட்டது. அவர்கள் சமூக புனருத்தாரணம் என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு மக்களின் அன்புக்குப் பாத்திரர்களாக விரும்புகிறார்கள் என்பது எங்கள்எண்ணம். நாங்கள் அரசாங்கத்தின் பக்கமாகச் சார்ந்துநின்று கோர்ட்-தொழில் துறைகளில் எங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்கிறோம் என்பது அவர்களது அபிப்பிராயம். நோக்கங்களில் சமுசயம் ஜனித்தது. ஆனால் ஜானகியின் விஷயத்தில் திரும்பவும் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது.

ஜானகி எங்கள் பேட்டையில் வாழும் ஒரு விதவை. அவளுக்கு இரண்டு பையன்கள். ஆனால் வாழ்க்கையை நடத்துவதற்கான சாதனங்கள் ஒன்றுமேயில்லை. திடீரென்று அந்தச் சிறுவர்களின் தந்தை காமதாவின் மரணம் ஏற்பட்டது. வீட்டு

வாடகை கொடுப்பதற்குக்கூட வீதியில்லை. வீட்டுச் சொந்தக் காரனுன சோகேலால் வாடகைப் பாக்கிக்காக அவ்விதவையின் சாமான்களை ஜப்தி செய்து ஏலம்போட விரும்பினுன். டாக்டர் திவாரியும் நாங்களும் தலையிட்டு மத்தியஸ்தம் செய்தோம். இதனுலேயே இருவரும் மீண்டும் நெருங்கிய நண்பர்களாகி விட்டோம்.

காமதாவின் சொந்த ஊர் ஹர்தோயி. அவன் நேர்மையான மனிதன். சாமர்த்தியமும் வாயாடி வம்புத்தனமும் நிறைந்த தனது தம்பியினுல் துன்புறுத்தப்பட்டுக் கடையையும், வீட்டின் ஒரு பங்கையும் துறந்துவிட்டு லக்ஷ்மணபுரிக்கு வந்து விட்டான். ஆனுல் பாவம். ஜானகியின் தலையில் சுகத்துக்கு என்று ஒன்றுமே எழுதப்படவில்லை. தனது குழந்தைகளுடன் ஜானகி ஹர்தோயிலுள்ள தன் வீட்டில் வசிக்கச் சென்றபொழுது அவளது மைத்துனன் அவளுக்கு வசிக்க இடந்தரவில்லை. திரும்பி வந்து அவள் தனது துயரக் கதையைச் சொன்னுள். அவளது சார்பில் ஹர்தோயி ஜில்லா கோர்ட்டில் வழக்குத் தொடுத்தோம். குறிப்பிட்ட தேதியில் ஹர்தோயி செல்லவேண்டும். சாட்சிகளுக்குக்கூட நாங்கள்தான் ஏற்பாடு செய்யவேண்டி இருந்தது. ஆனுல் அங்கே எங்கே தங்குவது என்பதுதான் பிரச்னே!

டாக்டர் திவாரி சொன்னுர்: "தங்கும் இடத்தைப்பற்றி என்ன கவலை? ஜில்லா போர்ட் தலைவர் விரஜனந்தன் எனது நண்பர். அவரைத் தெரியாதா? விரஜனந்தன் சாதாரண மனிதர் அல்ல. பத்திரிகைகளில் அவரது சர்ச்சைகள் எத்தனை வெளிவந்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"தம்பீ" டாக்டர் திவாரி தமது மூத்த பையனைக் கூப்பிட்டார். 'ஸத்தர்ம'– மகா சபையின் மாகாணப் பத்திரிகையின் சென்ற வாரத்திய இதழைத் தேடி எடுத்து வரும்படி கூறினுர். பிறகு என்னிடம் கூறலானுர்:

"விரஜனந்தன் சாதாரண மனிதன் அல்ல. அவர் ஜில்லா போர்ட் தலைவர். தம் அதிகாரத்தினுல் பசுக்களை பவுண்டுகளில் அடைக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிருர் தெரியுமா?

டாக்டர் மிகுந்த உற்சாகத்துடன் தொடர்ந்தார்: "கோமாதாவுக்கு இத்தனை மரியாதை வேண்டியதுதான். நாம் பிறந்தது முதல் இறக்கும் வரையில் பசு நம்மை வளர்க்கிறது. நமது நாடோ விவசாய நாடு. பசுவின் நிழலிலேயே வளரும் நாடு. இதனுல்தான் நமது தர்ம சாஸ்திரங்களில் பசுவின் சாணத்தால் சுத்தம் செய்யப்பட்ட இடத்திலேயே சகல தர்ம கருமங்களும் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பசுவின் கால் நகத்தில் தான் சகல தீர்த்தங்களும் சங்கமித்திருக்கின்றன என்று சாஸ்திரம் சாற்றுகிறது."

டாக்டர் திவாரி வைத்திய சிகித்சை சம்பந்தமாக பசுவின் சாணியில் உதிக்கும் விஞ்ஞான சக்திகளைப் பற்றிப் பல விஷயங்கள் சொல்லிக்கொண்டிருந்தார். எனது சிந்தனை வேறு புறத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

எந்த விவசாயியின் வயலைப் பசு மேய்கிறதோ அவனுக்கு சாணத்தின் விஞ்ஞான சக்தியினால் என்ன மகிழ்ச்சி ஏற்படக் கூடும். வயலை மேய்ந்த குற்றத்திற்காக கழுதையைப் பவுண்டில் அடைப்பது அல்லது அதன் சொந்தக்காரனுக்கு அபராதம் விதிப்பது நியாயமென்றால்அதே குற்றம் புரிந்த பசுவைப் பவுண்டில் அடைப்பது கூடாதா? அதன் எஜமானனுக்கு தண்டனை அளிக்கக் கூடாதா? என் கருத்தைத் திறந்து டாக்டரிடம் பேசி மறுபடியும் நட்பைமுறித்து மனவேற்றுமை ஏற்படுத்திக் கொள்வது உசிதமில்லை. தர்மத்தின் துறையில் சாதாரண நியாயத்திற்கும் தர்க்கத்திற்கும் இடமில்லை. தர்ம சாஸ்திரத்தின் பிரகாரம் பிராமணர்களுக்குப் போஜனம் செய்விப்பதால் புண்ணியம் உண்டு; நமக்கோ இதர வகுப்பினருக்கோ போஜனம் செய்விப்பதால் புண்ணியம் கிடையாது. அறம் எப்பொழுது பிராமணர்களுக்கும் மற்ற வகுப்பினருக்கும் இடையே, இரு சார்பினரும் மனிதர்கள் தான் என்ற சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லையோ, அப்பொழுது பசுவுக்கும் கழுதைக்கு மிடையே உள்ள சமத்துவத்தை எப்படி ஏற்க முடியும்? திவாரிதான் எப்படி இத்தர்க்கத்தை ஏற்பார்?

திவாரியின் புதல்வன் 'ஸத்தர்ம'த்தின் பழைய இதழைக் கொணர்ந்தான். முதல் பக்கத்திலேயே விரஜானந்தன் சிங்கின் படம் போடப்பட்டிருந்தது. அதன் கீழ் செய்தியும் குறிப்பும் இருந்தன:

"**கோ சம்ரக்ஷணை விஷயத்தில் ஹர்தோயி ஜில்லா போர்ட் தலைவரின் கீர்த்திமிக்க ஆதர்சப் பாதை**"

விஷயம், டாக்டர் திவாரி முன்பே வர்ணித்தது தான். டாகுர் விரஜானந்தன் சிங், ஜில்லா பவுண்டில் பசுக்களை அடைத்து வைக்கக் கூடாது என்று கட்டளை யிட்டிருக்கிறார். பசுக்களின் சொந்தக்காரர்களும் விவசாயிகளும் பசுக்களின் விஷயத்தில் கவனமாய் இருக்க வேண்டும். அவைகளைக் கண்டபடி திரியவிடக் கூடாது—இத்தியாதி. விரஜானந்தன் சிங் நியாயத்தில் விருப்பமுள்ளவரென்றும், செல்வாக் குடையவரென்றும், அவர் மூலம் கோர்ட்டில் ஜானகிக்கு ஒத்தாசையாகச் சாட்சிகளைச் சேர்ப்பதில் உதவி கிடைக்கும் எனவும் டாக்டர் என்னிடம் கூறி நம்பிக்கையூட்டினார்.

கோர்ட்டில் ஜானகியின் வழக்கு நடைபெறக் குறித்திருந்த நாளுக்கு முதல் நாள் மாலையே அதற்கான தயாரிப்புகளை நன்றாகச் செய்யும் பொருட்டு ஹர்தோயியை அடைந்தேன். ஸ்டேஷனிலிருந்து ஜில்லா போர்ட் தலைவரின் வீட்டை அடைந்த பொழுது,

மாலைக் கதிரவனின் மஞ்சட் கதிர்கள் இன்னும் ஒளி வீசிக் கொண்டிருந்தன. டாக்டர் திவாரி ஒரு போஸ்ட் கார்ட் எழுதியிருந்தார். தலைவர் எனது வருகையை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். கேட்டருகில் என்னைச் சந்தித்து உள்ளே அழைத்துச் சென்றார். வீட்டின் பின் புறத்தில், தோட்டத்தில் நாற்காலிகள் போடப்பட்டிருந் தன. டாகுர் விரஜானந்தருடன் நாலைந்து பேர் அமர்ந்திருந் தார்கள். அவர்கள் அவ்வூரில் இருக்கும் பெரிய மனிதர்கள். ஏதோ ஒரு விஷயத்தில் நியாய மாக சமரசம் செய்ய அவரது உதவியை நாடி மிகவும் வினய மாக வேண்டிக்கொண்டிருந்தார் கள். அருகில் ஓர் அரசமரத்தின் அடியில் தலையில் சிவப்பு முண் டாசு கட்டிய சேவகன் ஒருவன் வேரிலிருந்து சாறு பிழிந்து கொண்டிருந்தான்.

கிராமத்து மனிதர்கள் சென்ற பிறகு இரண்டு வெள்ளி டம்ளர் களில் ஐஸ் கலந்த வேர் மணக் கும் பாலை டாகுரின் எதிரில் வைத்தான் அச்சேவகன். டாகுர் முதல் டம்ளரை என்முன் நகர்த் தினார். சிறு வயதில் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி வேர் கலந்த பாலைக் குடித்ததால் நிலை மாறிப் பட்ட அவஸ்தையின் காட்சி என் நினைவில் நீங்கா திருந்தது. வேரினால் ஏற்படும் வெறியின் அச்சம் என் மனத் தில் சூழ்ந்திருந்தது. நான் மிகப் பணிவாக மன்னிக்கவேண் டும் என்று டாகுரை கேட்டுக் கொண்டேன். லக்ஷ்மணபுரியி லிருந்து வரும் விருந்தாளிக்காக ரோஜா அத்தரும், பாதாமும் கலந்த இப்பானத்தை டாகுர் தயாரிக்கச் செய்திருந்தார். "கொஞ்சங்கூட எடுத்துக் கொள்ள மாட்டீர்களா? இது சாக்ஷாத் சிவனுடைய வேர். உங் களுக்காகக் கொஞ்சம்தான் வேர் கலக்கப்பட்டிருக்கிறது" என்று ஏமாற்றம் தொனிக்க மொழிந் தார். இன்னொரு டம்ளர் பாலைக் கொண்டுவரச் செய்து அதில் ஐஸூம் சிறிது வேரும் கலந்து அருந்தும்படி வற்புறுத்தினார். இவ்வேண்டுகோளை நான் ஏற் றுக்கொள்ள வேண்டியே இருந் தது. இன்னும் ஓர் உருண்டை வேரைக் கலந்து இரண்டு டம் ளர் பாலையும் டாகுர் குடித்து விட்டார்.

டாகுரின் குதூகலமான தோற் றத்தைக் கண்டு இதுவே தக்க தருணம் என்று கருதி ஜான கிக்கு அவளது மைத்துனன் புரிந்துள்ள அநியாயத்தை விவ ரித்தேன்.

பிறகு டாகுரைப் பற்றி வேறு விவரம் ஒன்றுந் தெரியாததால் தயங்கிக்கொண்டே அந்த ஜில் லாவில் பசுக்களுக்குப் பவுண்டி லிருந்து விடுதலை யளித்த அவ ரது துணிவைப்பற்றி விவரிக்கத் தொடங்கினேன்.

அவரது கண்கள் சிவப் பேறின. முகம் கம்பீரமாக ஒளி பெற்றது. சௌகரியமாக நாற் காலியில் சாய்ந்து கொண்டே "வக்கீல் சார்! அந்த விஷயத் தை ஏன் கேட்கிறீர்கள்? போர்ட்

கூட்டத்தில் பலர் அதை ஆட்சேபித்தார்கள். ஜனங்கள் தான் எத்தனை மோசமாகி விட்டனர்? தர்மத்திற்கு எவர் மனதிலும் லவலேசம்கூட இடமில்லை. வெள்ளை அரசாங்கத்தில் கசாப்புக்காரன் கிராமத்திலிருக்கும் கிழட்டுப் பசுக்களை பட்டாளத்திற்காக இழுத்துச் சென்று விடுவான். இப்பொழுதோ உபயோகமற்ற பசுக்கள் மக்களுக்குக் கால் கட்டாகவும், கழுத்துச் சுமையாகவும் இருக்கின்றன. அவற்றைக் கட்டி வைத்துத் தீனிபோட யாரும் விரும்புவதில்லை. கீழ்ச் சாதியினருக்கு சும்மா கொடுத்தால்கூட அவர்கள் எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை. பசு இறப்பதற்கு முன் ஆறு மாதங்கள் யார் தீனி போடுவார்கள்? இவர்களுடைய யுக்தி கடவுளுக்குத்தான் வெளிச்சம். பட்டினியால் வாடும் கறவை யற்ற தம் பசுக்களைக் கருணையற்றுத் துரத்தி விடுகிறார்கள். பசியால் துடிக்கும் கிழப் பசுக்கள் ஏதாவது ஒரு வயலில் புகுந்து பயிரை மேய்ந்து விடுகின்றன. எந்தவயலில் மேய்கின்றனவோ அந்த வயலின் சொந்தக்காரர்கள் ஒரு தடவை இரு தடவை நஷ்டப்படுவார்கள். பிறகு பவுண்டில் பசுக்களை அடைக்க ஆரம்பித்தார்கள். பசு பவுண்டில் பதினைந்து நாட்கள் அடைபட்டுக் கிடந்தாலும் அதை விடுவித்து மீட்கவேண்டும் என்ற கவலை எவருக்கும் இல்லை. பசுவின் சொந்தக்காரன் தனது தலைப்பாரம் இறங்கிப் போனதாக அக்கடாவென்று இருந்து விடுகிறான்.

"பவுண்டில் அதன் காவல்காரன் பசுவுக்கு என்ன கொடுப்பான் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. ஆனால் பவுண்டில் அடைபட்ட பிராணி என்றால் அதன் தீனிச் செலவுக்குபில் ஏறத்தானே செய்யும். கணக்கு என்றால் கணக்குத் தான். பதினைந்து நாட்கள் விடுவிக்க ஒருவரும் வராவிட்டால் அதன் தீனிச் செலவை சரிக்கட்டி வசூலித்துக் கொள்ள உத்தரவிருக்கிறது, என்பது நீங்கள் அறிந்ததே. ஆனால் அதை ஏலத்தில் போட்டால் எட்டணாவுக்குக்கூடக் கேட்க ஆளில்லை. பசுவின் மதிப்பு இவ்வளவு தூரத்தில் இருக்கிறது.

டாகுர் ஆவேசத்துடன் கைகளை ஆட்டிக்கொண்டு தொடர்ந்தார்.

"எத்தனை முறை பசுக்கள் பவுண்டுக்கு வந்து சர்க்கார் கணக்கில் பத்து ரூபாய் பனிரெண்டு ரூபாய்களைத் தின்று தீர்த்திருக்கின்றன? ஜில்லா போர்ட், ஜில்லாவிலுள்ள கிழப் பசுக்களை எல்லாம் எத்தனை நாள் காப்பாற்ற முடியும்? பசு, ஒரு நாள் இல்லையேல் ஒருநாள் கிழப் பருவம் அடையத்தான் செய்யும். குடியானவன் நிலை தான் தெரியுமே? எத்தனை நாட்கள் கிழட்டுப் பசுவைப் போஷிப்பான்? கிழப் பசுவைக் கட்டிக் காப்பதென்றால் சின்னஞ் சிறு பசுக்களின் தீனியிலே பற்றாக்

குறை விழும். அரை வயிறே நிரம்பியுள்ள இளம் பசுக்கள் வேளைக்கு அரைப் படிக்குமேல் எப்படிக் கறக்கும்? வக்கீல் சார்! மக்கள் மனதிலே அறத்திற்குப் பேருக்குக்கூட இடமில்லை. பின் நாணயத்திற்கு எங்கேபோவது? இப்போது பசுவின் பெயரைக் கேட்டாலே நடுங்குகின்றனர். பசுவதை நின்று விட்டதோ இல்லையோ, பசுவே ஓர் பூச்சாண்டியாகி விட்டது. பசுவை ஒருவரும் வாங்க விரும்புவதில்லை. கிராமத்தில் அரை சேர் பால் கறக்கும் ஆட்டின் விலை ரூ. 60. பசுவின் விலை ரூ. 30. பசுவுக்கு இத்தனை மரியாதை. இந்த ஜனங்களை என்னவென்று சொல்ல. ஆடு, மூன்று நான்கு வருடங்கள் பால் கொடுக்கும். கறவை நின்றவுடன் அதன் இறைச்சிக்கோ தோலுக்கோ வேண்டி விற்கலாம். கிழப் பசு எதற்காகும்? ஜனங்களின் மனதில் தர்மத்திற்கு துளிக்கூட இடமில்லை. இருங்கள், உங்களுக்கும் ஒரு வழி செய்து சரிப்படுத்தி விடுகிறேன்"

சேர்மன் நாற்காலியில் இன்றும் நன்றாகச் சாய்ந்து கொண்டார். அவர் கண்களில் வேரினால் ஏற்பட்ட வெறி துடித்தது. அறத்தின் வீழ்ச்சியினால் மக்கள்மீது ஏற்பட்ட கோபமும், பசுவின் பாதுகாப்பில் அவர் காட்டிய உற்சாகமும் ஏறுமுகமாக அதிகரித்துக் கொண்டே போயின. கிழப் பூச்சாண்டிப் பசுக்களைப் பற்றி இப்படி உருகுகின்றாரே! இவருக்கு வாக்களித்துப் பதவியைக் கொடுத்த மக்களின் பாதுகாப்புக்கு என்ன வழி செய்கிறார்? என்று நான் யோசிக்கத் தொடங்கினேன்.



வெட்சியும் கரந்தையும்

○

[எஸ். ராமகிருஷ்ணன்]

4

வேடர்கள் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்பதற்காகக் கரந்தைப் போர் புரிந்த ஆயர்கள், சிறிய ஊர்களில் சுயேச்சையாக வாழ்ந்தனர். அவர்களது வீரப் பண்பையும் கொடைப் பண்பையும் வீரருக்குக் கல்நட்டு வழிபடும் முறையையும் ஆயர் குலப் பெண்களின் வீரத்தையும் சென்ற மாதக் கட்டுரையில் விவரித்தோம். அந்த ஆயர் சமூகங்களைப் பற்றிப் பழைய நூல்களிலுள்ள வேறு சில சான்றுகளை இந்தக் கட்டுரையில் நோக்குவோம்.

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய புறப்பாட்டு (279) ஒரு முதுகுடி மகளின் நெஞ்சுரத்தைப் புகழ்கிறது. அவளது ஊரின் ஆநிரைச் செல்வத்தைக் கவர்வதற்காக வெட்சியார் தாக்கினார்கள். முதல் நாள் போரில், அவளது அண்ணன் யானையைக் கொன்று தானும் விழுந்து இறந்தான். இரண்டாவது நாள் போரில் அவளது கணவன், பெரிய பசுக் கூட்டத்தைப் பாதுகாத்துப் போராடி உயிரிழந்தான். மூன்றும் நாளும் போர்ப் பறை முழங்கியது, வெட்சிப் பூவணிந்த வேடர்கள் மீண்டும் வந்து விட்டதை யறிந்த அந்த முதுகுடி மகள், தனது ஒரே மகனை சிறுவனையே போருக்கு அனுப்பினாள். வீரப் புகழையே விரும்பிய தாய், மகனது குடுமியில் எண்ணெய் தடவிச் சீவி, அவனுக்கு வெண்மையான ஆடை உடுத்தி வேலும் கையில் கொடுத்துச் "செருமுகம் நோக்கிச் செல்க" (செருமுகம்-போர்க்களம்) என்று பணித்தாள்.

போர் வீரமே ஆண் மக்களின் தனிப் பெரும் கடமையாகக் கருதப்பட்டது. பொன்முடியார் பாடுகிறார். (312):—

"ஈன்று புறந்தருத(ல்) என் தலைக்
கடனே
சான்றோனாக்குத(ல்) தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம(ம்) முருக்கி
களிறு (எ) றிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே.

மகனைப் பெற்று வளர்ப்பது அன்னையின் கடமை. அவன் நற்பண்புகளால் சிறக்கும்படி செய்வது தந்தையின் கடமை. கொல்லன் வேல் வடித்துக் கொடுக்க வேண்டும். வேந்தன்

நல்லொழுக்கத்தைப் புகட்ட வேண்டும். அவன் (மகன்) வாளைக் கையிலேந்தி அரும் போர் புரிந்து, பகைவரது யானையைக் கொன்று வெற்றி காண வேண்டும்.

சீறூர் வேந்தர்கள் பெருநில வேந்தர்களையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. கோவூர் கிழாரின் பாட்டு (புறம் 308) இதைத் தெளிவு படுத்துகிறது.

"சீறூர் மன்னன் சிறியிலையெஃகம்
வேந்தூர் யானை ஏந்து முகத்ததுவே"

என்று அவர் கூறுகிறார். சீறூர் மன்னனுடைய வேல் (சிறிய இலையை உடைய வேல்) பெருவேந்தன் ஊர்ந்து வந்த யானையின் நெற்றியில் தைத்து அதன் கண் அழுந்தி விட்டதென்பது இதன் பொருள்.

தன் யானையின் நெற்றியில் வேல் பாய்ந்ததைக் கண்ட வேந்தன், தனது வேலைச் சினந்து எறிந்தான். அது சீறூர் மன்னனது மார்பில் பாய்ந்தது. ஆனால் அவன் அந்த வேலைப் பிடுங்கிக் கையில் ஏந்தி, பகைவனது யானைகளெல்லாம் அஞ்சி ஓடச் செய்தானென்று புலவர் கூறுகிறார்.

சீறூர் வேந்தர்களில் சிலர், பெரு வேந்தர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருந்தனர் என்பதை புறம் 319-லிருந்து அறியலாம். ஒரு சீறூர் மன்னனிடம் பரிசில் பெற எண்ணி, ஒரு பாணன் அவனிடத்துக்குச் செல்கிறான். அங்கு அந்த அரசனது மனைவி பாணனுக்கு நல்வரவு கூறி, முயலின் சுட்ட கறியை உண்டு விட்டுத் தங்கும்படி உபசரிக்கிறாள், அப்பொழுது,

"சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்து விடு தொழிலொடு சென்றனன்"

என்று கூறுகிறான். "சீறூர் வேந்தன் நேற்றைய தினம், வேந்தனது காரியமாகப் போனான்" என்பது இதன் பொருள்.

வேந்தனை எதிர்த்து ஊரின் உரிமையைக் காத்து நின்ற மன்னர்கள் தோல்வியடையும் பொழுது, பெருவேந்தர்களுக்குப் பணிந்து அவர்களது சிற்றரசுகளாக ஆகிவிடுவார்களென்று அனுமானிக்கலாம்.

சீறூர்களில் சுயேச்சையாக வாழ்ந்த முல்லை நில மக்களின் கொடைப் பண்பை முன்பே விவரித்தோம். புறம் 328-ம் அதை விளக்கமாக எடுத்துரைக்கிறது.

"புல்லென் அடைமுதல் புறவு சேர்ந்-
திருந்த
புன்புலச் சீறூர் நெல் விளையாதே
வரகுந்தினையு முள்ளவை யெல்லாம்
இரவன் மாக்களுக்கீயத் தொலைந்தன"

என்று அந்தப் பாட்டு கூறும்.

[புல்லென் அடைமுதல்—புல்லும் அடிமரமும் உள்ள. புறவு—முல்லை நிலம். புன்புலம்—புன்செய்.]

முல்லை நிலத்திலுள்ள சீறூர் அது. எனவே அதில் நன்செய் இல்லை; நெல் விளைவதில்லை. வரகும் தினையும் நிறைய விளைகின்றன.

ஆனல் அவையெல்லாம் இரவலர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்து விட்டன. எனினும் அந்தச் "சீறூர் மன்னனைப் பாடினைச் செலினே" (பாடிச் சென்ருல்), அவன் கையை விரிக்கமாட்டான். கதிரிலுள்ள அரிசியைக் கொய்து, நெல் கலந்து, ஊன் துண்டங்களுடன் சமைத்து விருந்தளிப்பான். அத்துடன் தயிரும், களாப் பழத்தைப்போலப் புளிப்பேறிய கள்ளும் அளிப்பான். இவ்வாறு புலவர் கூறுகிருர்.

மாங்குடி கிழாரின் பாட்டு (335) முல்லைநிலத்துச் சிற்றூரின் உணவுவகை, பூவகை, குடிவகை, தொழுகைநிலை ஆகியவற்றைச் சித்திரிக்கிறது.

"குரவே தளவே குருந்தே முல்லையென்
நிந்நான் கல்லது பூவுமில்லை"

எனக் கூறி, குரவு, தளவு, குருந்து, முல்லை ஆகிய நால் வகைப் பூக்களே முல்லை நிலத்தில் உண்டு என்பதைப் புலப் படுத்துகிருர்.

"கருங்கால் வரகே
இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே
பொறிகிளர் அவரையொ
டிந்நான் கல்லது
(உ)ணவு முல்லை"

என்று கூறி, வரகு, தினை, கொள், அவரை ஆகியவையே முல்லைநில மக்களின் உணவு வகைகள் என்று தெளிவுபடுத்து கிருர்.

"துடியன் பாணன் பறையன் கடம்பன்
நிந்நான் கல்லது குடியுமில்லை" [என்

என்று கூறி, துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய நால் வகைக் குடிகளே முல்லை நிலத்தில் உண்டு என்று கூறுகிருர்.

"ஒன்னுத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து
கல்லே பரவி னல்லது [வீழ்ந்தெனக்
நெல்லு குத்துப் பரவுங் கடவுளு மில
[வே"

[ஒன்னுத்தெவ்வர் - இணங்கி வராத விரோதி. விலங்கி - தடுத்து. ஒளிறுஏந்து மருப்பு - விளக்கமாகவுள்ள உயர்ந்த யானைக்கொம்பு. களிறு - யானை. எறிந்து வீழ்ந்து - கொன்று தாமும் இறந்து விழுந்து. பரவுதல் - வழிபடுதல். நெல்லு குத்து - நெல்லைச் சொரிந்து.]

என்றுகூறி, இணங்கி வராத பகைவரை எதிர்த்து நின்று, அவர்களது யானைகளுடன் போராடி. அவற்றைக் கொன்று விட்டு விழுப்புண்பட்டு இறந்த வீரர்களின் நடுகற்களைத் தவிர வேறு ஏந்தக் கடவுளையும் முல்லைநில மக்கள் தொழமாட்டார்களென்பதை மாங்குடி கிழார் புலப்படுத்துகிருர். நடுகற்களுக்கு நெல்லைச் சொரிந்து வழிபடுவரென்பதையும் அவர் விளங்கவைக்கிருர்.

வீர வழிபாடொன்றே அவர்களது கடவுள் வழிபாடாக விருந்ததென்று கூறுவதிலிருந்து, முல்லைநில மக்களின் வீர இயல்பைத் தெளிவாக உணரமுடியும்.

முல்லை நிலத்தில், துடி என்ற உடுக்கை அடிப்பவன், யாழ்

வாசிக்கும் பாணன், பறைகொட்டும் பறையன், கடம்பன் ஆகிய நான்கு குடிவகைகளே உண்டு என்று ஆசிரியர் கூறுவது கவனிக்கத்தக்கது. கடம்பன் என்று மாங்குடிகிழார் குறிப்பிடும் குடியைப்பற்றி ஒன்றும் அறியமுடியவில்லை. கடம்ப மரத்தின்கீழ் எழுந்தருளுகிறவன் என்ற பொருளில், கடம்பன் என்ற சொல் முருகன் என்று பொருள் படும். ஆனால் இங்கு அந்தப் பொருளில் கடம்பன் என்ற சொல் ஆளப்படவில்லை. இது ஒரு குடிப்பெயர். இந்தப் பொருளில், கடம்பன் என்ற சொல் வேறு எங்கும் ஆளப்படவில்லை. எனவே கடம்பன் குடியின் தொழிலைப் பற்றி, கூருராகக் கணிக்கமுடியவில்லை. கடம்பன் குடி காவல்வேலை செய்ததா? அல்லது துடியன் பாணரைப் போல கடம்பரும் ஏதாவது இசைக்கருவி பயின்றனரா? எவ்வாருயினும், துடியன், பாணன், பறையன் ஆகிய குடிகளைப் போலக் கடம்பரும் ஆயர்களுக்குப் பணிசெய்து பிழைத்தவரென்று அனுமானிக்கலாம். இங்கு குடி என்பது சுதந்திரமான குடிமக்களைக் குறிக்காது. குடி என்ற சொல் பணியாளரையே குறிக்கும். எனவேதான், முல்லைநிலக் குடிகளைக் கூறப்புகுந்த சான்ருேர், ஆயரைக் குறிப்பிடாமல், துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய நான்கு குடிகளையே குறிப்பிட்டார். ஆயர்குடி ஆளும் குடியாக இருந்தது. மேற்கூறிய நான்கு குடிகளும் ஆயரைச் சார்ந்து வாழ்ந்தன. கொல்லர்களும் பல முல்லைநிலத்தூர்களில் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்திலும் கொல்லர்கள் இருந்தனரென்பதைக் கண்டோம். ஆனல் மாங்குடிகிழார் எந்தச் சீறூரைப்பற்றிப் பாடுகிருரோ அந்த ஊரில் கொல்லர்கள் இருந்ததில்லை போலும்! அவர்கள் வேற்றூர்களிலிருந்து வேல்வடித்துப் பெறுவார்கள் போலும்!

பத்துப்பாட்டில் ஒன்ருகவுள்ள பெரும்பாணற்றுப் படையில், ஆயர்குடியிருப்பை ஆசிரியர் அருமையாகச் சித்திரிக்கிருர். குறுந்தடிகள்மீது அமைந்திருந்த குடிசைகளின் கூரை, வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்தன. குடிசைகளின் கதவு கழிகளால் கட்டப்பட்டிருந்தது. வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் குறுந்தடிகளில் கட்டியிருந்த தழைகளை நின்று மேய்ந்தன. குடிசையின் முற்றத்தில் மாடுகளைக் கட்டுவதற்கென்று முளைகள் இருந்தன. முளைகளில் தாம்புகள் கிடந்தன. பகலில் இடையர் மாடுமேய்க்கச் சென்றனர்; ஆய்ச்சியர் மோர் விற்கச் சென்றனர். ஆட்டுத்தோலைப் பாயாக விரித்து அதில் படுத்து உறங்கிய கிழவரே குடிசைக்குக் காவல்.

இடையர் குலப் பெண்கள் காதில் குழை அணிந்தனர். அவர்களது கூந்தலில் சிறிய சுருள்கள் இயல்பாக அமைந்து அழகு செய்தன. அவர்கள்

அதிகாலையில் எழுந்திருந்து தயிர் கடைந்தனர். அவர்கள் கயிற்றை வலித்துக் கடையும் பொழுது, மத்து, புலி முழங்கு வதைப் போல ஆரவாரம் செய்தது. தயிர் கடைந்த பின், மோர்ப் பானையைச் சுமந்து கொண்டு, பெண்கள் வெளியூர் சென்றனர். மோர் விற்றுக் கிடைப்பதைக் கொண்டு வந்து சுற்றத்தினருடன் உண்டு மகிழ்ந்தனர். வேடர்களுக்கு நெய்யைக் கொடுத்து விட்டு, அவர்கள் கவர்ந்து சென்ற பால் மாடுகளை விலையாக ஓட்டி வரும் சாமர்த்தியமும் அவர்களுக்கு உண்டு. இரண்டு தலைகளிலும் உறிகளை உடைய காவடித் தண்டுகளைத் தூக்கித் தூக்கி இடையர்களது தோட்களில் தழும்பேறி யிருந்ததாக ஆசிரியர் கூறுவதால், இடையர்களும் மோர் சுமந்து செல்வதுண்டு என்று அனுமானிக்கலாம்.

பசுக்களை வருத்தும் தடியும் கையுமாக இடையன் காட்சியளித்தான். கோடரியால் மரங்களை வெட்டும் பழக்கம் உடையவனா யிருந்ததால், அவனது கையில் தழும்பு ஏற்பட்டிருந்தது. அவன், செருப்பில்லாமல் நடந்ததால் வடுப்பட்ட பாதங்களை உடையவனா யிருந்தான். பால் கறந்த கையைக் கழுவாமல் தலையில் தடவிக் கொள்வது அவனுக்குப் பழக்கம்.

பாலும் சோறும் தின்றுவிட்டு, இடையர்கள் பசுக்களைக் காட்டுக்கு ஓட்டிச் சென்றனர். மாடுகள் மேயும்பொழுது அவர்கள் மூங்கிற் குழலில் பாலைப் பண் வாசித்து இன்புற்றனர்; அல்லது ஒரு வகை யாழில் குறிஞ்சிப் பண்ணை இசைத்துக் குதூகலித்தனர். தீக்கொள்ளியில் மூங்கிற் குழலை சுட்டுத் துளை உண்டாக்கிய இடம் கறுத்திருந்ததென்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இடையர்கள் பலவகை மலர்களைத் தொடுத்த மாலைகளை அணிந்தனர். அவர்கள் அரையில் மட்டுமே ஆடை உடுத்தினர்.

ஆயர்களின் ஊரைச் சுற்றி முள்வேலி இருந்தது. ஆயர்கள் விருந்தினரை வரவேற்றுப் பாலும் தினையரிசிச் சோறும் வழங்கினர்.

ஆயர் குடியிருப்பையும் மாடுகள் மேயும் புல்வெளியையும் கடந்து சென்றால், முள் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்த காட்டுக்கு இடையில், சிறு ஊர் ஒன்றைக் காணலாமென்று ஆசிரியர் கூறுகிறார். இங்கு, முற்றத்தில் வரகுக் குதிர்கள் இருந்தன. கொட்டிலில் கலப்பை சார்த்தி யிருந்தது. அதில் ஒரு பக்கத்தில் அடுப்பு எரித்த காரணத்தால், புகை படிந்திருந்தது. அந்தக் கொட்டிலில்தான் எருதுகள் கட்டப் பட்டிருந்தன. இந்த ஊரில் முல்லை நில உழவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் வரகுச் சோற்றையும் வெந்த அவரைப் பருப்பையும் விருந்தினருக்கு வழங்கினார்கள். (தொடரும்)

கலையும் வாழ்வும்

◆◆

இகார் செர்னுஸ்டின்

◆◆

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பூனின் என்பவர் எழுதிய கிராமம் என்னும் நூலைப் பற்றி வொராவ்ஸ்கியின் கருத்து பெரிதும் பயன்தரத் தக்கது. "உள் அனுபவத்தின் விளைவாக உருவான, திறமையுள்ள எழுத்தாளனின் சிறந்த கதை" என அதை வர்ணித்தார். ஆனால் இந்த எழுத்தாளர் வாழ்க்கையில் காண்பது என்ன? வாழ்க்கையின் எந்த அம்சங்களை அவர் வர்ணிக்கிறார்? அவர் காலத்திய ருஷ்ய கிராமத்தைப் பற்றிய சித்திரம் அது. காட்டுமிராண்டித்தனம், அதர்மம், மிலேச்சத்தனம் ஆகியவற்றின் உறைவிடமாக அக்கிராமம் காட்சியளிக்கிறது. பிரகாசமான அம்சம் எதுவும் காணப்படவில்லை. புதியதோர் வாழ்விற்கான விழிப்புபற்றிய அறிகுறிகளே இல்லை. ருஷ்யக் கிராமத்தைப் பற்றிய இச்சித்திரத்தில் ஓரளவு உண்மை உண்டு. கிராமிய முட்டாள்தனத்திற்கு அது ஒரு எடுத்துக் காட்டு. இத்தகைய உண்மைகளை நாம் வாழ்க்கையில் காணத்தான் செய்கிறோம். **ஆனால் கலைக்கு இந்த வெளித்தோற்றம் மட்டும் காணாது. வாழ்வின் வெளித் தோற்ற உண்மைகள், வாழ்வின் முழு உண்மைகள் அல்ல. அவை அரை குறை உண்மைதான். கலையில் அத்தகைய அரை குறை உண்மையைப் பொய் என்றே கருத வேண்டும்.**

1905-ம் ஆண்டு புரட்சிக்குப் பின்பு இருந்த கிராமத்தையே பூனின் வர்ணிக்கிறார். ஆனால் புரட்சிக்குப்பின் கிராமங்களில், விவசாயிகளிடத்தில் புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளதைப் பார்க்கத் தவறியுள்ளார். எனவேதான் இந்த ஒருதலைப்பட்சச் சித்திரம். அந்த உண்மை அவர் கலைக்கண்ணுக்கு தப்பியதற்குக் காரணம், அதைப் புரிந்து, இலக்கியத்தில் சித்திரிப்பது கடினமானது என்பதனால் அல்ல. "நசித்துக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ அறிவாளிகளின் கண்ணோட்டத்துடன்" அக்கிராமத்தைப் பார்த்தார். விளைவு என்ன? தான் கண்ட காட்சியை அதன் இயக்கத்திலும், வளர்ச்சியிலும், பார்க்க முடியாமற் போய்விட்டது என்று தெளிவுபடுத்தினார் வொராவ்ஸ்கி.

புதியதை உணரும் திறன்; வாழ்க்கையில் காணப்படும் புதிய

தோற்றங்களைப் பார்த்து, வர்ணிக்கும் வன்மை; "என்ன நடந்து கொண்டிருக்கிறது" என்பதைப் புரிந்துகொள்ளும் திறமை ஆகியவற்றை கலைத் தன்மையின் உரைகல்லாக வொராவ்ஸ்க்கி கருதினார்; உண்மையான யதார்த்த வாதத்தை சரியாக எடைபோட்டுப் பார்ப்பதற்கு வேண்டிய அடிப்படையாக எண்ணினார். பூனினின் கிராமம் என்ற கதையையும், குப்ரின் என்பவரின் சிருஷ்டிகளையும், இத்தகைய கண்ணோட்டத்துடன்தான் கணித்தார். கோர்க்கியின் சிருஷ்டிகளையும் இதே கண்ணோட்டத்துடனே அணுகினார். ருஷ்ய எழுத்தாளர்களான பூனின், குப்ரின், ஏன்-செக்காவ் கூட சாதிக்க இயலாததை, கோர்க்கியால் சாதிக்க முடிந்தது என்பதே இந்த அடிப்படையிலிருந்துதான் விளக்கினார். "பிறந்து கொண்டிருந்த புதிய வாழ்வின் பலவீனமான குரலைப் பகுத்தறிந்து காண்பதில்" வெற்றி கண்டவர் கோர்க்கி; "எதிர்காலத்தின் சாத்தியக் கூறுகளை" எடுத்துக் காட்டியவர் கோர்க்கி. இதன்காரணமாக, "திரண்டு கொண்டிருந்த புயலின் முன்னோடியாக" விளங்குவதில் கோர்க்கி வெற்றிகண்டார் என வொராவ்ஸ்க்கி எடுத்துக் காட்டினார். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெற்ற விடுதலைப் போரின் புதிய கட்டத்தோடு கோர்க்கியின் இலக்கிய சிருஷ்டிகளுக்கு உட்தொடர்பு இருந்தது; இதன் விளைவுதான் அவருடைய சிருஷ்டிகள், மற்றதைவிட மாறுபட்டதாகக் காணப்படுகிறது என வொராவ்ஸ்க்கி இயம்பினார்.

கோர்க்கியின் ஆரம்பகால சிருஷ்டிகளிலேயே, போராட்டத்திற்குத் தயாராகி வந்த தொழிலாளி மக்களின் வீரம் செறிந்த போர்க் குணம் பிரதிபலிப்பதை விமர்சகர் வொராவ்ஸ்க்கி தெளிவாகக் கண்ணுற்றார். இதிலிருந்து எழுத்தாளர் கோர்க்கியின் வளர்ச்சியை, கூர்ந்து பின்பற்றினார். அந்த வளர்ச்சி சமுதாயத்தின் வளர்ச்சியோடு இணைந்திருந்ததை நன்கறிந்தார்.

ஆனால் கோர்க்கியினது சிருஷ்டிகளின் சமுதாயத் தன்மைபற்றி நிர்ணயிப்பதில் வொராவ்ஸ்க்கி முரணற்றதோர் போக்கைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார். சோஷலிஸ்ட் யதார்த்த வாதத்தின் தந்தையான கோர்க்கியின் சிருஷ்டிகளிலே காணக்கிடந்த அந்தப் புதிய அம்சத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள இந்த விமர்சகரால் இயலவில்லை. குறிப்பாக, கோர்க்கியின் நவீனமான அன்னையில்வரும் கதாநாயகி பிரதிநிதித்துவமற்ற(Untypical) கதாபாத்திரமென எழுதினார்; இது சரியல்ல. ருஷ்ய சமுதாயத்தின் மிகப் பின்தங்கிய பகுதிகள் வாழ்வில் புத்துணர்வு பெற்று, புரட்சிகரமான செயல்களில் பங்கு கொள்வதை, கோர்க்கி இந்த நவீனத்தில் சித்திரிக்கிறார். இத்தகைய புரட்

சிப் போராட்ட காலத்திலேயே மனிதனின் மூர்த்தி வளர்ந்து, செழுமைப் படுவதை அதில் எடுத்துக் காட்டுகிறார். கோர்க்கியின் இத்தகைய சிருஷ்டி மிக மிகப் புதியது ; இதுகாறும் இல்லாத ஒன்று, எனவேதான், சோஷலிஸ்ட் கலையின் பல புதிய அம்சங்களைப் புரிந்திருந்தபோதிலும், விமர்சகர் வொராவ்ஸ்க்கியால், இந்தப் புதியதைப் பூரணமாகக் கிரகிக்க இயலவில்லை. தான் கண்டவை அனைத்தையும் ஒருமுகப்படுத்திக் கூற முடியவில்லை ; சில சமயங்களில் தன் சொந்தக் கூற்றுகளையே இதன் விளைவாக மறுக்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் சமூக வாழ்வின் பிரதான சம்பவங்கள், விடுதலைப் போரடைந்துள்ள புதிய கட்டத்தின் விசேஷத் தன்மை ஆகியவற்றை எழுத்தாளரின் சிருஷ்டியோடு இணைத்துப் பார்ப்பவர் வொராவ்ஸ்க்கி. இதன் காரணத்தால்தான் கோர்க்கியின் தத்துவசாரத்தை சரியாக நிர்ணயிக்க முடிந்தது ; கோர்க்கியின் தத்துவார்த்த வளர்ச்சியையும், சிருஷ்டித்தன்மையின் வளர்ச்சியையும் பற்றிய பிரதான பிரச்னைகளை சரியாக எடுத்து இயம்புவது சாத்தியமாயிற்று.

ஒரு வர்க்க சமுதாயத்தில் கலையின் வர்க்கத் தன்மையைக் கோடிட்டுக் காட்டும் காலத்திலேயே, வர்க்க ஆராய்ச்சியைக் கொச்சைப்படுத்துவதை வொராவ்ஸ்க்கி அனுமதிக்கவில்லை. ஒரு கலைஞன் தனது சிருஷ்டியில், எந்தவர்க்க நலன்களை வெளியிடுகின்றானோ, அந்த வர்க்கத்தின் வாழ்க்கையை மட்டுமின்றி சமுதாயம் முழுவதையுமே பிரதிபலிக்கச் செய்கின்றான். வொராவ்ஸ்க்கி இதை நன்கு அறிந்திருந்தார். ஒரு கலைஞனின் சிருஷ்டிகளில் யதார்த்த நிலைமையானது எந்த அளவுக்கு ஆழமாகவும், முழுமையாகவும் பிரதிபலிக்கப்படுகிறது என்பதை அவனது வர்க்கக் கண்ணோட்டமும், சமூகத்தைப்பற்றிய அவன் கருத்துக்களும் தீர்மானிக்கின்றன. எனவே ஒரு கலைஞன் வாழ்க்கையின் எந்த அம்சங்களை சரியாக சித்திரித்துள்ளான் ; அவனது வர்க்கக் கண்ணோட்டத்தால், எந்த அம்சங்களின்பால் கண்மூடியாக இருந்திருக்கிறான் என்பதை நிலைநாட்டுவதே ஒரு விமர்சகனின் கடமையாகும்.

துர்கனீவ் என்ற ருஷ்ய எழுத்தாளரைப்பற்றி வொராவ்ஸ்க்கி ஓர் கட்டுரை எழுதினார். அதில், "இந்த சக்திவாய்ந்த எழுத்தாளனுடைய மூளையினது கிரகிப்பின் வீச்சை, அவரது வர்க்கக் கண்ணோட்டம், அவரை அறியாமலே கட்டுப்படுத்திவிட்டது" எனக் குறிப்பிட்டார். ஆனால் அதே நேரத்தில், நிலப் பிரபுத்துவ நலன்கள் எவ்வளவு முற்போக்கானவையாக இருப்பினும்கூட, அதற்கப்பால், துர்கனீவ் ஓரடிகூட எடுத்து வைக்கவில்லை என்று கூறுவது தவறாகும்" என ஒரு எச்சரிக்கையும் விடுத்துள்ளார். தன்னுடைய

இந்தக் கூற்றுக்காதரவாக துர்கனீவ் எழுதிய பண்படுத்தப் படாத மண் எனும் நவீனத்தை எடுத்துக் காட்டினுர். இந்த நவீனத்தில் வரும் சாலமன் எனும் கதாபாத்திரத்தின் மூலம், நிலப் பிரபுக்களின் குணுங்களை மட்டுமின்றி, முதலாளித்துவ ருஷ்யாவின் குணுசங்களேயும் துர்கனீவ் சித்திரிக்கிருர்.

கோல்ட்ஸாவ் என்ற கவிஞனேப்பற்றிய கட்டுரையில் "மக்கள் மத்தியிலிருந்து" வருபவன் தான் உண்மையான மக்களின் எழுத்தாளன் என்பது தவறென வொராவ்ஸ்கி வற்புறுத்திஞர். மக்கள் வாழ்விலுள்ள மூலதாரமான அம்சங்களே, அவர்களின் ஆசைகளே, கனவுகளே கலாரசனேயுடனும், ஆழத்துடனும் தன் சிருஷ்டியில் எவன்பிரதிபலிக்கச் செய்கிருனே, அவன் தான் உண்மையான மக்கள் கலேஞன் என்று எடுத்துக்காட்டிஞர்.

கலேயின் தத்துவத்திற்குள்ள விசேஷத் தன்மையை அவர் நன்கு அறிந்திருந்தார். கலேயில் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் போக்கின் இந்த விசேஷத் தன்மையானது எழுத்தாளனின் சொந்த விருப்புகளோடும் அவனது வர்க்க அனுதாபங்களோடும் மோதவும் செய்யலாம்.

"இதில்தான் உண்மையான கலே சிருஷ்டியின் இரகசியம் அடங்கியிருக்கிறது. அதாவது, ஒரு விஷயத்தை, ஸ்தூலமான ரூபங்களில் தன்னகத்தே கொண்டு எழுத்தாளனின் விருப்புகளுக்கு அப்பாற்பட்ட முடிவுகளே அளிப்பதில் கொண்டு விடுகிறது.

இந்த "ரகசியம்" தான் என்ன? ஒரு கலே சிருஷ்டியின் வெளி உலகப் பொருளின் உள்ளடக்கமும், விசேஷத் தன்மையும் எழுத்தாளனின் கண்ணேட்டத்தையும், விருப்பங்களேயும் விட விசாலமானதாகி இருப்பது ஏன்? அவை ஏன் மோதிக் கொள்ள வேண்டும்?

வொராவ்ஸ்கியின் கட்டுரைகளில் ஒன்றில் இவ்விஷயம் பற்றிய ஆழமான, விலேமதிக்கத் தகுந்த கருத்துக்களே நாம் காணலாம். ஒரு எழுத்தாளன், தன் கருத்துக்களே மட்டும் தொகுத்துக் கூறுவதில் பிரயோசனமில்லே. எழுத்தாளன் தனது சொந்த இலட்சியங்களேமட்டும் வெளிப்படுத்துவது, பொதுவாகக் கலேயின் தத்துவார்த்த உள்ளடக்கமாகாது. வாழ்க்கையையும் யதார்த்த உண்மையையும் பற்றிய, ஆழ்ந்த பிரதிபலிப்பு தான் கலேயின் தத்துவார்த்த உள்ளடக்கமாக இருக்கமுடியும். வாழ்க்கையைப்பற்றி, ஒரு முழுமையான, அழகுணர்ச்சியுடன் கூடிய, சக்திவாய்ந்த சித்திரத்தை உருவாக்குவதின்மூலம் அதை வாசகர்கள் ஏற்குமாறு எழுத்தாளன் செய்யமுடியும்.

ஒரு எழுத்தாளன், "தன் கருத்துக்களே உயிருள்ள மக்களோடு சேர்த்து உருவளித்து, அம்மக்களே ஒரு குறிப்பிட்ட உறவுகளில் நிறுத்த வேண்டும்.

அவர்களை வாழவும், இயங்கவும் செய்யவேண்டும். ஆனால், அவ்விதம் செய்வதின் மூலமாக தன்னையே ஒரு உயர்ந்த உண்மைக்கு, கலை உண்மைக்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறான்; அதாவது அழகுணர்ச்சியுடன் உரு மாற்றப்பட்ட, உயிருள்ள உண்மைக்கு கீழ்ப்படுத்திக் கொள்கிறான். அவ்விதம் செய்வதின் மூலமாக தன் சிருஷ்டிக்கே அவன் எஜமானனாக இருப்பதில்லை. உண்மையின் மறு பதிப்புகளாக தன் கதா நாயகர்களை உருவாக்கியவுடனே அவர்களின் உள் விதிகளின்படி தான் அவர்களை அவனால் இயங்க வைக்க முடியும். அவன் உருவாக்கிய கதா பாத்திரங்களும், உயிரோடு உள்ள சூழ்நிலையும்தான் அவன் சிருஷ்டியின் முடிவைத் தீர்மானிக்க முடியும்".

கலைச் சிருஷ்டியின் இந்த விசேஷத் தன்மையின் காரணத்தினால்தான் திறமையுள்ள எழுத்தாளன், தன்னுடைய அரசியல் கருத்துக்களுக்கு அப்பாற்பட்ட, வாழ்க்கையைப் பற்றிய ஒரு உண்மையான சித்திரத்தை அளிக்க முடியும். ஆனால், அப்படிச் செய்வதற்கு அந்த எழுத்தாளன் நேர்மையானவனாகவும், தன் திறமையை துஷ் பிரயோகம் செய்யாதவனாகவும் இருக்க வேண்டும்.

ஆனால், ஒரு சில பொய்மையான லட்சியங்களுக்காக வாழ்க்கையின் உண்மையை ஒரு எழுத்தாளன் மீறுவானாயின், அவன் மோசமான, கலைத்தன்மையற்ற சிருஷ்டிகளைத்தான் உருவாக்குவான்; அதன் மூலம் தன் திறமையையே அழித்து விடுவான். ஆன்டிரியேவ் என்ற ருஷ்ய எழுத்தாளனைப் பற்றி விமர்சிக்கும்பொழுது, "உயிருள்ள உண்மையை பலாத்காரமாக சிதைத்ததன் காரணத்தால்" அவன் சிருஷ்டிகளின் கலைத் தன்மையையே கொலை செய்தான் என்பதை படிப்படியாக எடுத்துக் காட்டியுள்ளார். வாழ்க்கைக்குப் புறம்பான கருத்துக்களைக் கூறுவதற்காக, வாழ்க்கை பற்றிய விஷயங்களை தன் குறிக்கோள்களுக்கு உகந்தாற்போன்று சரிப்படுத்தி, தன் தேவைக்கு உகந்த ஒரு அமைப்பிற்காக வாழ்க்கையையே சிதைக்க வேண்டிய நிலை" அந்த எழுத்தாளனுக்கு ஏற்பட்டதெனக் கூறினார். ஒரு மோசமான கருத்து கதா பாத்திரங்களின் மனோபாவத்தில் ஒரு பொய்மையை தவிர்க்க முடியாமல் புகுத்தி விடுகிறது. அதன் காரணமாக, தேவையான முரணற்ற தன்மையும், தர்க்க ரீதியான வளர்ச்சியும் அக் கதா பாத்திரங்களுக்கு இருப்பதில்லை. அந்த ஆன்டிரியேவ் எழுதிய இருள் என்ற கதையில் வரும் கதாநாயகன் நடந்துகொள்ளும் முறையில் உள்ளடங்கிய தர்க்கமோ, மனோதத்துவக் கடமையோ இருப்பதில்லை. "அவர்களை செயலிலிறக்கிய எழுத்தாளனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்" பொம்மைகளாகவே அக் கதாப்பாத்திரங்கள் நடிக்

கின்றனர். இதன் காரணமாக கதா பாத்திரத்தின் உண்மைத் தன்மையும், முழுமையும் இல்லாமல் போகிறது. அதற்குப் பதிலாக பொதுத் தன்மையும், பாசாங்கும், செயற்கைத் தன்மையும், பொய்மையும், தோன்றுகின்றன. கதா பாத்திரங்கள் கலைச் சிருஷ்டிகளாக அல்லாமல் எழுத்தாளன் கண்டுபிடித்த உருவங்களாக மாறிவிடுகின்றன என்று கூறினர்.

வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட கருத்துக்கு உருவளிக்க முயற்சிப்பது, வாழ்வின் பூரண மறுபதிப்பை (reproduction) நிராகரிப்பதாகும்; சித்திரத்தைக் கொடுப்பதற்குப் பதில் வர்ணனையைப் பயன்படுத்துவதும், எடுத்த விஷயத்திலிருந்து வெகு தூரம் விலகிப்போவதும் நிகழும். இதன் விளைவாக அச் சிருஷ்டி, தன் அழகை இழந்துவிடுகிறது. படிப்பவனுக்கு எவ்வித உற்சாகமும் ஏற்படுவதில்லை.

வாழ்க்கையை உணர்வுபூர்வமாகத் திரித்துக் கூறும் கலைக்கு அழகு இருக்க முடியாது. கலை உண்மையானது அழகுணர்ச்சியோடு உரு மாற்றப்பட்ட ஜீவியமுள்ள உண்மை என்னும் கருத்தும், பொய்மைக்கும் கலைத்தன்மைக்கும் எவ்வித உறவும் கிடையாதென்பதும், அழகு நுகர்ச்சித் தத்துவம்பற்றிய வொராவ்ஸ்க்கியின் ஆய்வுரைகளின் முக்கிய அம்சங்கள்.

நவீனவாதிகளின் முதலாளித்துவ தன்மை எனும் கட்டுரையில், இத்தகைய கண்ணோட்டத்துடன் தான் கலைச் சிருஷ்டிகளிலுள்ள பிரச்சாரத் தன்மைபற்றிய பிரச்னையைப் பரிசீலனை செய்தார். இப்பிரச்னையைச் சுற்றிக் கடுமையான சமர்கள் அன்று நிகழ்ந்தன. ஏன், இன்றுகூட அதன் முக்கியத்துவம் போய்விடவில்லை.

கலைத் தன்மையையும், கலையின் பிரச்சாரத் தன்மையையும், எதிரெதிராக வைத்து, பிற்போக்குவாதிகள் பேசினர். பிரச்சாரத் தன்மை கலையை அழித்துவிடுமென அடித்துக் கூறினர். அன்றைய பிற்போக்கு இலக்கியம் பாரபட்சமற்றது; எனவே யதார்த்த வாதத்தையும் பிரச்சாரத் தன்மைகொண்ட இலக்கியச் சிருஷ்டிகளையும்விட அது அளவிடமுடியாத உயர்ந்த மட்டத்திலிருக்கிறது என அவர்கள் கூறினர்.

"அதாவது இலக்கியச் சிருஷ்டிகளிலே ஏதாவது ஒரு சமூகக் கருத்து மின்னுமாயின் அது பிரச்சாரத் தன்மை கொண்ட இலக்கியம் போலும். சகல சமூக நலன்கள், கருத்துக்களிலிருந்து விடுபட்ட ஒன்றே, பிரச்சாரத் தன்மையற்ற 'பரிசுத்தக் கலை' போலும்'' என்று வொராவ்ஸ்க்கி நையாண்டி செய்தார்.

இலக்கியத்தை "பிரச்சாரத் தன்மைவாய்ந்தது, "பரிசுத்தக் கலைத் தன்மை வாய்ந்தது" என்று பிரித்துக் கூறுவது சுத்த முட்டாள்தனம்; பிரச்சாரம் இல்லாத இலக்கியமே கிடையாது

என எடுத்துக் காட்டினார் வொராவ்ஸ்க்கி "பிரச்சாரத் தன்மை இருப்பது நவீனத்தி லல்ல; எழுத்தாளனிடத்தில் தான், சமுதாயத்தில் துளியள வேனும் அவனுக்கு அக்கறை இருக்குமாயின் அவன் பிரச்சா ரத் தன்மை கொண்டவனா கிறான்" எனக்கூறினார்.

ஆனால் இந்தப் பிற்போக்குப் பிண்டங்களின் இலக்கியம் முழு வதுமே பிரச்சாரத் தன்மை கொண்டதுதான். ஆனால் அது பிற்போக்கான, வாழ்க்கைக்குப் புறம்பான பிரச்சாரமாகும்; சமீப காலத்திய சமூக அபிலாஷை களை முறியடிப்பதற்காக அது பயன்படுத்தப்படுகிறது எனப் பகர்ந்தார்.

இந்தப் பிரச்சாரத் தன்மை சமூக விரோதமானதால், கலைக் கும் புறம்பானதாகும். அது கதா பாத்திரங்களின் அமைப்பி லிருந்து இயற்கையாக வளருவ தில்லை; வாழ்க்கையைப்பற்றிய உண்மையான சித்திரத்தி லிருந்து வரக்கூடிய முடிவின் பயனுமல்ல அது. யதார்த்தத் தைத் திரித்திக் கூறுமாறு எழுத் தாளனை நிர்ப்பந்திக்கும், வாழ்க் கையின் உண்மைக்கு முரண் பட்ட பிரச்சாரம் அது. "கதா பாத்திரங்களையும், மாதிரிகளை யும், நிலைமைகளையும் பிரச்சாரத் திற்குகந்தமாதிரி தயாரித்துக் கொள்ளும் இலக்கியம் அது. எனவே பிற்போக்கான நசிவு இலக்கியம் உண்மையான வாழ் வுக்கு உருவளிப்பதில்லை. நய வஞ்சகமான, ஆபத்து நிறைந்த கற்பனைகளை உருவாக்கி, குரூர மான முறையில் தன் பிரச்சாரத் தை வாசகன்மீது திணிக்கிறது.

எனவே பிற்போக்கான, சமூக விரோதப் பிரச்சாரம்தான் கலை களுக்கே ஆபத்தை அளிப்பது; ஏனெனில் பொய்மையான, கலாரசனையற்ற சிருஷ்டிகளை உருவாக்குவதில்தான் அது கொண்டு விடுகிறது. இதன் மூலமாக எத்தகைய உண்மை யான சிருஷ்டி சுதந்திரமும் இருக்காது. ஏனெனில் கலை ஞன்மீது உண்மையின் சக்தி எவ்வளவு பலமான பிடிப்பைக் கொண்டுள்ளதோ, அந்த அள வுக்குத்தான் அவன் சுதந்திர மாக இருக்க முடியும். இந்த விசேஷத் தன்மையின் காரணத் திலேதான் வாழ்க்கையைப் பற் றிய உண்மையான சித்திரத்தை அளிக்க முடிகிறது; அது உண் மையான கலைச் சிருஷ்டியாக வும் ஆகிறது.

முற்போக்கான தத்துவார்த்த உள்ளடக்கம் கலைச் சிருஷ்டி யைப் போஷித்து வளர்க்கிறது. ஆனால், இதை உருவாக்க, எழுத்தாளன், கருத்துக்களை மேலெழுந்த வாரியாக ஏற்றுக் கொண்டால் மட்டும் காணாது. அந்தக் கருத்துக்கள் எழுத்தாள னோடு ஒன்று கலந்த ஒரு பகுதியாகவே ஆகிவிட வேண்டும். அவனது ஆழ்ந்த துணிபாக, அவனது பணியை இயக்குவிக்கும் தீவிர சக்தியாக அவை மாற வேண்டும். தன்

உள்ளத்தில் தோன்றுவதற்கு மாருக, தன் காலத்திய தேவைகளுக்கு உகந்தாற் போன்று ஒரு சில கருத்துக்களை செயற்கையாகப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று தோப்ரோலுபா என்ற மிகச் சிறந்த ருஷ்ய சிந்தனையாளன் கோரவில்லை. தோப்ரோலுபாவின் அழகு நுகர்ச்சித் தத்துவக் கருத்துக்களைப் பற்றி விளக்கும்பொழுது, இந்த உண்மையைத் தான் வொராவ்ஸ்கி முன்னுக்கு கொண்டு வந்தார். கருத்துக்களும், பிரசாரத் தன்மையும் கலா ரூபத்தோடு உள்ளடங்கி இருக்க வேண்டும்; அவை கலா ரூபத்தின் தொங்கு சதையாக மட்டும் இருந்தால் போதாதென்று வொராவ்ஸ்கி கூறினுர். கலா ரூபமே பிரச்சாரத் தன்மையுடையதாக இருக்க வேண்டுமெனக் கூறினுர். மிகச் சிறந்த உண்மையான கலா சிருஷ்டியில் எழுத்தாளனின் கருத்துக்களும், பிரச்சாரமும் வாசகனின் உணர்விலே அவனை அறியாமல் இயற்கையாகவே யாரும் புகுத்தியது போன்றில்லாமல், கலா ரூபத்துடனும் கூட ஊடுருவிச் செல்கின்றது.

ஒரு குறிப்பிட்ட இலக்கியச் சிருஷ்டி உண்மையிலேயே ஆழ்ந்த கலை உணர்ச்சியுடன் உருவாக்கப்பட்டிருக்குமேயானுல், அது வெறும் தொகுப்பாக இல்லாமல், உண்மையிலே சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்குமானுல், அதில் இந்தப் போக்கு, மறைந்து கிடக்கும் மானசீக சக்தியைப் போன்று இயங்குகிறது.

"ஆனுல் சில சந்தர்ப்பங்களில், மிகச் சிறந்த எழுத்தாளர்கள் கூட தங்களின் பிரச்சாரத் தன்மையினுல் உந்தப்பட்டு, தாங்கள் உருவாக்கிய புதிய கருத்துக்களை அவசரமாக பிரகடனப்படுத்த முயலுகின்றனர். இதன் காரணமாக முழுதும் பூர்த்தியடையாத கதா பாத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன; அவசர சிந்தனையால் உருவான கலாரசனையற்ற செயற்கைச் சிருஷ்டிகள் அச்சாகி வெளி வருகின்றன" என விமர்சகர் வொராவ்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

கலைஞனின் அரைகுறைத் திறமையும், தேர்ச்சியின்மையும், கலைக்கே ஆபத்தானது எனக் கூறி, அதை வொராவ்ஸ்கி கடுமையாக எதிர்த்தார். மிகமிக முற்போக்கான கருத்துங்கூட மகோன்னத அலங்காரமும், கவர்ச்சியும் இல்லாத கலாரூபத்தில் வெளியிடப்படுமாயின் எந்த வாசகனின் உள்ளத்தையும் தொட முடியாது. இது கலையையே மாசு படுத்துவதாகும் என்பதை அவர் தெளிவாக புரிந்திருந்தார்.

சமூக வாழ்வில் கலை ஆற்றும் பங்கையும் முக்யத்துவத்தையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். மக்களுக்கு கலையின் மூலமாக அளிக்கப்பட வேண்டிய "தார்மீக, அழகு நுகர்ச்சிப் போதனையை" அவர் அறிந்திருந்

தார். இதன் காரணத்தால் கலைச் சிருஷ்டிகளின் கலா ரசனைத் தேர்ச்சி பற்றிய பிரச்னையை மிகக் கண்டிப்பாக வலியுறுத்தினார். ஒரு உண்மையான கலைச் சிருஷ்டியானது. "மகத்தான ஜீவ சக்தியுடையதாகவும், குறிப்பாகச் சொல்லும் திறமையுடையதாகவும் இருக்க வேண்டும்" என்றார். எதிர்கால சந்ததியைத் தன் அணிக்கு இழுக்கும் திறமை அதற்கு இருக்க வேண்டும் என்று கூறினார்.

ஒரு குறிப்பிட்ட கலைச்சிருஷ்டியானது "கலைத் தன்மைக்கு உகந்ததாக இருக்கின்றதா; அது ஏதாவது புதியதை, இன்றுள்ளதைவிட உயர்ந்ததைக் அளிக்கின்றதா; இலக்கியப் பொக்கிஷத்தையே செழுமைப் படுத்தும் அளவிற்கு அதில் இருக்கக்கூடிய புதியது எது— என்பனவற்றை நிலைநாட்டுவது தான்" ஒரு விமர்சகனின் முக்கியக் கடமையாக வொராவ்ஸ்க்கி கருதினார், போலித்தனமான சொத்தை இலக்கியக் குப்பையை ஒதுக்கிவிட்டு "கலையை அலங்கரிக்கும் முத்துக்களை" கண்டுபிடிப்பதே விமர்சகனின் கடமை எனக் கூறினார்.

"இலக்கிய நடையும் ரூபமும் எழுத்தாளனின் சிந்தனையோடு மிக நெருங்கிப் பிணைந்திருக்கின்றன. எனவே, அவனிடம் ஏற்படும் மாறுதல்களை ஒட்டி அவையும் மாறுகின்றன" என்று அவர் எழுதியுள்ளார். இலக்கிய விமர்சனம்பற்றிய அவருடைய கட்டுரைகள் எல்லாம் கலா ரூபத்தைப்பற்றிய மிகச் சரியான ஆழ்ந்த பரிசீலனைக்கு மாதிரிகளாகத் திகழ்கின்றன. எந்த எழுத்தாளனின் சிருஷ்டியைப் பற்றியும் பரிசீலிக்கும்பொழுது, அந்த எழுத்தாளனுடைய இலக்கிய ரூபத்திற்கும் நடைக்கும் அதன் தத்துவார்த்த உள்ளடக்கத்திற்கும் உள்ள ஜீவாதாரமான தொடர்பை நன்கு கவனிப்பார்.

வெறும் வரி வடிவத்தையும், ரூபாலங்காரப் பாசாங்கையும் அவர் என்றுமே சகித்துக் கொண்டிருந்ததில்லை. நசிவு இலக்கியமானது, தன் சிருஷ்டிகளிலே உள்ள தத்துவார்த்த வறுமையை மறைப்பதற்கு, இவற்றைப் பயன்படுத்துகின்றன என எடுத்துக்காட்டினார்.

ஆழ்ந்த துணிவு; சமூக வாழ்வில் இலக்கியத்திற்கு இருக்கும் முக்யத்வம்பற்றிய சரியான தெளிவு; வாழ்க்கையின் புதிய ரூபங்களை உருவாக்குவதில் உணர்வுபூர்வமாக இறங்கியுள்ள மக்களுக்குப் பணிசெய்வதே கலை என்ற தீவிரமான ஆர்வம்–ஆகியவை வொராவ்ஸ்கியின் கட்டுரைகளின் அமைப்புக்கும், நடைக்கும் உள்ள விசேஷத் தன்மைகளாகும்.

இலக்கிய வளர்ச்சிப்போக்கை, பற்றில்லாத ஒரு பார்வையாளராக இருந்து கொண்டு வொராவ்ஸ்க்கி பார்க்கவில்லை; கலைச்சிருஷ்டிகளை உயிரற்ற

வகையில் மதிப்பிடுபவராகவும் இருக்கவில்லை. பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க நடைபெறும் போராட்டத்தில் மக்களைத் திரட்டுவதற்குக் கலை ஆற்றும் முக்கியமான பங்கை நன்குணர்ந்த வேகமுள்ள போராட்டக்காரராக அவர் திகழ்ந்தார்.

வொராவ்ஸ்க்கியின் கட்டுரைகளை நாம் படிக்குங்கால், அவை உண்மையானதோர் அழகு நுகர்ச்சித் தத்துவக் கண் கொண்டு, இலக்கியத்தை நேசிக்கும் ஒரு மனிதரால் எழுதப்பட்டவை என நாம் உணரமுடியும். கலையின் தன்மையையும், எழுத்தாளனது தொழிலின் உன்னதப் பொறுப்பையும் நன்கு தெரிந்த ஒருவரின் கட்டுரைகள் அவை என்பதை நாம் பார்க்கமுடியும்.

ஏ. வி. லுனுசார்ஸ்க்கி என்பவர் அக்காலத்திய இலக்கிய வாழ்வில் முக்கியமானதோர் பங்கை வகித்தவர். வொராவ்ஸ்க்கியின் கட்டுரைகளைப்பற்றி அவர் கூறும்போது, சொன்னதாவது :—"வொராவ்ஸ்க்கியின் கட்டுரைகள் அக் காலத்திய மார்க்ஸிஸ்டுகள் மத்தியில் பூத்துக் குலுங்கும் செந்நிறப் பூக்களாகத் திகழ்கின்றன; மழையற்ற பிராந்தியத்தில் மழை பெய்தால் எவ்விதம் வரவேற்று, உவகையுடன் பருகப்படுமோ அவ்விதமே, அக்கட்டுரைகள் வரவேற்கப்பட்டன".

எதையும் எப்படி நேசிப்பது, எப்படி மெச்சிப் புகழ்வது என்பது வொராவ்ஸ்க்கிக்கு நன்கு தெரியும். கோர்க்கியின் சிருஷ்டிகளைப் பற்றி எழுதும் பொழுதோ, பெலின்ஸ்க்கியின் மகோன்னத மூர்த்தியைப் பற்றி சித்திரிக்கும்பொழுதோ, தான் பெற்ற இன்பத்தை, தன் வாசகர்களும் தன் எழுத்துக்கள் மூலம் பெறுமாறு செய்வார். ஆனால் கழிசடை இலக்கியக் கர்த்தாக்களை நையாண்டி செய்யும் காலத்தில் தயை தாட்சண்யம் பார்க்க மாட்டார். இவர்களை, புரட்சியை விட்டோடிப்போன இந்த ஆசாமிகளைப் பற்றி, கனல் பறக்கும் கோபத்துடனுமே பேசியுள்ளார். போராட்டத்தில் வீழ்ந்த வீரர்களின் சவங்களை மாசுபடுத்தும் கூட்டம் இது என வர்ணித்தார். "அரசியலிலும், புரட்சிவாதிகளின்,நேற்றைய போராட்டத்தின் வீரர்களின் வாழ்க்கையிலும், இதர விஷயங்களிலும் கொள்ளையடிக்கும் கரங்களுடன் புகுந்துகொள்ளும்" கூட்டமென இவர்களைச் சித்திரித்தார்.

கேலி செய்வதில் அவர் சமர்த்தர்; அதில் முழுத் தேர்ச்சியடைந்திருந்தார். பாழடைந்த இலக்கிய கர்த்தாக்களின் போலித்தனமான, புதுமைகள் பற்றிய வேஷத்தைக் கலைத்தெறிந்தார். அவர்களின் கோழைத் தனத்தையும், மிலேச்சத் தனத்தையும் அம்பலப் படுத்தினார். ஆண்ட்ரயேவ் போன்ற வாழ்வில் நம்பிக்கையற்ற எழுத்தாளர்களின் மாயாவாதத் தத்துவத்தின் பொய்மையான முக்கியத்தை கிண்டல் செய்தார்.

ஆபாசக் காட்சிகளை வர்ணிக்கும் இலக்கியத்தைச் சாடினார்.

திட்டமான, தெளிவுள்ள, உயர்ந்த கலைத் தரமுடைய மொழியையே அவருடைய கட்டுரைகளில் உபயோகித்தார்.

புரட்சிக்கு முந்திய மார்க்ஸிய விமர்சன வரலாற்று ஏடுகளில், வாட்ஸ்லாவ் வொராவ்ஸ்க்கியின் இலக்கிய விமர்சனம், பிரகாசமான, மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளுள் ஒன்ருகக் கருதப்படுகிறது. அரை நூற்ருண்டுக்கு முன்னே அவர் எழுதிய அந்தக் கட்டுரைகள் அன்றைய அரசியல் வாழ்வின் சூடான பிரச்னைகளைப் பற்றியவை. ஆனல் அவை சென்ற காலத்தில் நிகழ்ந்தவற்றின் சாட்சியாக, ஒரு ஞாபகார்த்த இதழாக மட்டும் இருக்கவில்லை. அழகு நுகர்ச்சித் தத்துவம் பற்றிய பல பிரச்னைகளைப் பற்றி மிகுந்த ஆழத்துடன் தன் கட்டுரைகளில் அவர் எழுதியுள்ளார். இன்றுங்கூட, தன்னுடைய கடினமான, பொறுப்புள்ள தொழிலிலும், கலையிலும் ஆர்வங் கொண்டுள்ள மனச் சாட்சியுள்ள எழுத்தாளனுக்கு அப்பிரச்னைகள் மிக முக்கியமானவையாகும்.

தமிழாக்கம்: கார்த்திகைவேலு.

யோக்கியதை

ஆண் தேனீக்கள் வேலை செய்வதில்லை. பெண் தேனீக்கள் தான் கூடு கட்டுவது, தேன் சேகரிப்பது போன்ற வேலைகளைச் செய்யும். ஒரு தடவை ஆண் தேனீக்கள் ஒரு தேன் கூட்டிற்குள் புகுந்து பெண் தேனீக்களை விரட்ட முயற்சித்தன. விரட்டி விட்டால் கூடும் தேனும் தங்களுக்குக் கிடைத்து விடும் என்பது அவைகளின் நினைப்பு.

ஆனல் பெண் தேனீக்கள் வெளியே போக மறுத்தன. கடைசியில் இரண்டு கட்சிகளும் குளவியிடம் நியாயம் தீர்ப்பதற்குப் போகச் சம்மதித்தன. வழக்கை விசாரித்த குளவி, "இந்தக் கூடு யாரைச் சேர்ந்தது என்பதைச் சொல்வது கஷ்டமான காரியம். ஒன்று செய்யுங்கள்.—இரண்டு கட்சிகளும் இங்கேயே கூடுகளைச் செய்து தேன் கொண்டுவந்து நிரப்புங்கள். யாருடைய கூடு இந்தக் கூட்டைப்போலவே இருக்கிறது என்று பார்க்கலாம்" என்று கேட்டுக்கொண்டது.

பெண் தேனீக்கள் உடனே வேலையைத் தொடங்கின. ஆண் தேனீக்கள் வேலை செய்ய மறுத்தன. அதனல் பெண் தேனீக்களுக்குச் சாதகமாகக் குளவி தீர்ப்பளித்தது.

—ஈசாப்.